# தமிழ்ப் பொழில்

## தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 59

மலர் : 12

## உள்ளுறை

1. **சிறப்பென்னும் செம்பொருள்** .... 529
விததுவான். கோ. சாமிநாதன், B. O L.,
17/18, ஆதிசேஷன் நகர், ஸ்டேட் பாங்கு
காலனி அருகில், மருத்துவக்கல்லூரி
நெடுஞ்சாலை, தஞ்சாவூர்-7.

2. **மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர்** .... 535
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
மு. சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
சுவடிப்புலம்-ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

3. **தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை** .... 545
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

4. **உலகம் பொய் (மித்தை) என்பதை விளக்கும் உவமங்களும் அவற்றின் நயமும்**... 561
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி,
எம். ஏ., எம். ஓ. எல். பி. எச். டி.
40, நைனியப்பன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — பங்குனி மலர்: 12

மார்ச் — ஏப்ரல் 1986

## சிறப்பென்னும் செம்பொருள்

வித்துவான், கோ. சாமிநாதன் B.O.L.,
17/18, ஆதிசேஷன் நகர், ஸ்டேட் பாங்கு காலனி அருகில்
மருத்துவக்கல்லூரி நெடுஞ்சாலை, தஞ்சாவூர்-7

'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்பது அறிவு'

இது 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்தில் வரும் குறட்பா,

பிறப்பு என்னும் பேதைமை நீங்க–பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சை கெட,

சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு—வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்விய பொருளைக் காண்பதே ஒருவருக்கு மெய்யுணர்வாவது — இது பரிமேலழகர் உரை.

நான் இவ்வுரைக்கு என் சிற்றறிவுக்கு எட்டிய ஒரு விளக்கவுரையைக்காண விழைகிறேன்.

சிறப்பு 'ஒன்றற்கே உரிய இயல்பு' எனப்பொருள்படும். ஒன்று 'வீடு' அல்லது 'வீட்டின்பம்' எனப் பொருள்படும். அஃதாவது அவ்வின்பம் தனக்கு ஒப்புமையாக வேறு ஒரு இன்பம் இல்லாதது; அதனால் 'ஒன்று' ஆகியது. சிறப்பு 'வீட்டின்பத்திற்கே உரிய இயல்பு' ஆகியது.

பிறப்பு - அனைத்து உயிர்களுக்கும் பொதுவாகிய இயல்பு ஆகும். அஃதாவது அனைத்து உயிர்களுக்கும் ஒன்றோடு ஒன்று ஒப்புமையுடைய இயல்பாதலால் பொதுவியல் பேயன்றிச் சிறப்பியல்பு ஆகாது.

'அவிச்சை' என்பது 'அவித்தை'; அதாவது வித்தையல்லாததாகிய 'பொய்ம்மை'யாகும். பிறப்பிற்கு முதற்காரணமாய அவித்தை பொய்ம்மை' யாவது,

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ்வார்' — (கடவுள் வாழ்த்து)

—என்னும் குறட்பாவிற்கு 'மெய், வாய், கண், மூக்கு; செவியென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார் பிறப்பின்றி எக்காலத்தும் ஒருதன்மையராய் (வீட்டுலகின்கண்) வாழ்வார்' எனப்பரிமேலழகர் எழுதும் உரையிலிருந்து பெறப்படுகிறது. இவ்வித்தையல்லாதது பிறப்பிற்கு வித்தாகிறது.

'பிறப்பு'க்காரியமாகவும் 'பேதைமை' காரணமாகவும் இருப்பினும் ஒரு பிறப்பின்கண் நிகழ்வுறும் பேதைமையே அடுத்தடுத்துவரும் பிறப்புக்களுக்குக் காரணமாகிறதாகலின் 'பிறப்பென்னும் பேதைமை' யெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

'பேதைமை' காரணமாவதோடு மட்டும் நில்லாமல் முதற் காரணமாவது,

'அடல்வேண்டும் ஐந்தன்புலத்தை விடல் வேண்டும்
வேண்டியவெல்லாம் ஒருங்கு' — (துறவு)

—என்னும் குறட்பாவிற்கு 'வீடெய்துவார்க்குச் செவிமுதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல் வேண்டும்; கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற் பொருட்டுத் தாம்படைத்த பொருள் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும்' என்று கூறப்பெறும் உரையிலிருந்து பெறப் படுகிறது.

செம் பொருளைக் காண்பது மெய்யுணர்வு. மெய்யுணர் வென்பது 'பாச ஞானம்', 'பசு ஞானம்', 'பதி ஞானம்', என்னும் மூவகை ஞானங்களுள் 'பதி ஞான' மாகும். 'பதி ஞானம்' தன்னைத் 'தனக்குவமையில்லாதானாகிய இறையாகப் பாவித்தல்'. பதிஞானம் பசு ஞானத்தைவிட உயர்ந்தது.

'பசு ஞானம், என்பது 'ஆன்மசொரூப ஞானம்'
'ஐயுணர்வெய்தியக்கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வில்லாதவர்க்கு' (மெய்யுணர்தல்)

— என்னும் குறட்பாவில் 'சொல்லப்படுகின்ற புலன்கள் வேறு பாட்டான் ஐந்தாகிய உணர்வு அவற்றை விட்டுத்தம் வயத்த வாதல்' என்று கூறப்பெறும் பொருள் 'பசு ஞானத்தை'க் குறிப்பதாகும். இது பசுஞானமாவது, சூக்கும உடம்பாகிய ஆன்மா சூக்கும பூதங்களாகிய ஐம்புலன்களையும் பெற்றிருப் பதனால் பெறப்படுகின்றது. 'பசு ஞானம்' என்பது 'தன் உடலினுள் இருக்கும் ஆன்மாவே "தான்" என்று உணர்வது. இஞ்ஞானமும் வீட்டைப் பயக்காது என்பது இக்குறளினால் பெறப்படுகின்றது. ஏனெனில் ஒருவன் தன் எதிரில் இருக்கும் மற்றொருவனைப் பார்த்து 'அவன் உடம்பினுள் இருக்கும் ஆன்மாவைப் போல்தான் தன் உடம்பினுள்ளும் ஆன்மா இருக்கிறது' என்று ஒப்பிட்டுப்பார்த்து மனத்துள் உணரும் ஞானமாதலால் இதுவும் வீட்டைப் பயக்காது. எனவே 'செம்பொருளைக் காண்பதாகிய' 'பதிஞானமே வீட்டைப் பயக்கும் என்பது பெறப்படுகின்றது.

'தோற்றக்கேடுகளின்மையின் நித்தமாய், நோன்மை யாற்றன்னை யொன்றுங்கலத்தலின்மையிற்றூய்தாய்த்,

தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாகிய, செம் பொருள் ஆன்மாவேயன்றி வேறில்லை. ஆனால் பசு ஞானத்தையுங் கடந்து பக்குவமடைந்த ஆன்மா; அதாவது எதிரில் உள்ளவன் ஆன்மாவை ஒப்புமையாகக் கொள்ளாமலே 'தானே' ஆன்மா என்று புரிந்து கொள்ளும் நிலையில் உள்ள ஆன்மா,

'உயிர்' என்பது ஆன்மாவேயாயினும் 'உய்ய வேண்டிய நிலையில் உள்ளது' என்னும் பொருளையுடைய உடம்பை யியக்கும் அருவப்பொருள். இதனாலேயே 'செம்பொருளைக் காண்கை' என்பதற்கு 'உயிர்தன்னவிச்சைகெட்டு அதனொடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல்' என்று உரை கூறினார். உயிரை'யும் 'செம்பொருளையும் வெவ்வேறாக்கியது உயிர் 'உய்ய வேண்டிய நிலையில் உள்ளது' என்பதையும், செம் பொருள் 'உய்வுக்கு மிக அண்மையில் உள்ளது' என்பதையும் அறிவித்தற்கேயாம்.

செம்பொருளைக் கண்டபிறகு 'செம்பொருள்' 'மெய்ப் பொருளா'கிறது.

மெய்யென்பது உடம்பேயாம். ஆனால் ஐந்தவாவினை யும் வென்ற மிகத்தூய்மையான உடம்பு. ஐந்தவாவினையும் வெல்லாத உடம்பு உடம்பேயன்றி 'மெய்' யெனக்கொள்ளப் படாது என்பதும், 'பொய்' யெனக் கருதப்படும் என்பதும் நாலடியாரில் 'தூய்தன்மை' எண்ணும் அதிகாரத்தில் வரும், 'தோற்போர்வை' எனத்தொடங்கும் வெண்பாவில் பெண்ணின் உடம்பு பொய்யாகக் கருதப்படவேண்டும் எனக் கூறப்படுமுகத்தான் அதை விரும்பும் ஆண் உடம்பும் பொய் யெனக் கருதப்படவேண்டும், என்று உய்த்துணர்த்தலினால் பெறப்படுகிறது. அதே அதிகாரத்தில் 'தக்கோலம்' எனத் தொடங்கும் வெண்பாவில் பெண்கள் செய்து கொள்ளுகின்ற கோலமே 'பொய்'யெனக் கூறப்படுதலினாலும் மேற்கூறிய கொள்கை வலியுறுத்தப்படுகிறது. 'மெய்ம்மை' என்னும் அதிகாரத்தில் 'தாம் செய்வினையல்லால்' எனத் தொடங்கும் வெண்பாவில் வினைவயத்தான் அவாவினை அறுக்காத 'உடம்பும் பயமின்றே' எனக் கூறப்படுதலாலும் உடம்பு 'பொய்' யென்பதனை உய்த்துணரலாகும்.

ஔவைக் குறளில், 'உள்ளுடம்பின் பயன்' என்னும் அதிகாரத்தில் வரும்,

'பொய்க்கெல்லா மாசனமாயுள்ளதற்கோர் வித்தாகு
மெய்க்குள்ளாமாய வுடம்பு'

என்னும் குறளுக்கு, 'ஸ்தூல சரீரத்திற்கு உள்ளேயிருக்கப்பட்ட சூக்கும சரீரமானது எல்லாப் பொய்க்கும் ஆதாரமாயிருக்கின்ற சரீரத்திற்கு ஓர் விதையாகும்' எனக் கொடுக்கப்பெறும் உரையிலிருந்தும் அங்கிதாரணை' என்னும் அதிகாரத்தில் வரும்,

'ஐயைந்து மாய வகத்துளெறி நோக்கிற்
பொய்யைந்தும் போகும்புறம்'

என்னும் குறளில் 'பொய்யைந்தும்' என்பதற்கு 'ஐந்து அவாவும்' என்று கொடுக்கப்பெறும் உரையிலிருந்தும் 'பொய்' யென்பது உடம்பேயாம் என்பது பெறப்படுகிறது.

'பதி ஞானம்' என்று சொல்லப் பெறுகின்ற 'மெய் யுணர்தல்' என்பது எதிரில் உள்ளவன் ஆன்மாவை ஒப்புமை கோட லின்றித்தன் சூக்கும உடம்பாகிய ஆன்மாவையும், பருவுடம்பாகிய தேகத்தையும், ஐக்கியப்படுத்தித் 'தானே' ஆன்மா என உணர்தலாகும். இது சாத்தியமென்பது, ஒளவைக் குறளில் 'துரியதரிசனம்' என்னும் அதிகாரத்தில் வரும்.

'அமாவாசை பூரணையாகு மவர்க்குச்
சமனாமுயிருடம்புதான்'

என்னும் குறளுக்கு 'அமாவாசையையே பௌர்ணமியாகக் கொள்ளுபவருக்கு உயிருமுடம்பும் சமானமாகும்' என்று கூறப்படும் உரையிலிருந்து பெறப்படுகிறது. தேகம் கேவலப் பொருளாகளான். கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலான்' என்று உரையெழுதினார்.

'செம்பொருளைக் காண்கை' யென்பதனைச் 'சமாதி யெனவும் கூறுப' என்று கூறுகிறார் உரையாசிரியர். 'சமாதி' என்பது 'மனதைப் பரம்பொருளோடு ஐக்கியப்படுத்தி நிறுத்துகை' என்று பொருள் படுவதனால் 'செம்பொருளைக் காண்கை' என்பதனோடு எங்ஙனம் பொருந்தும் என்னும் கேள்வி எழுகிறது இதற்குச் 'சிறப்பு' என்னும் 'வீட்டின் பத்திற்கே உரிய இயல்பாகிய வீட்டின்பத் தொடக்கத்திற்குச் 'செம்பொருளைக் காண்கை' யாகிய 'மெய்யுணர்வு' நிமித்த

காரணமாதலின்'செம்பொருளைக் காண்கையை'ச்சமாதியென உபசரித்தார் என்று கொள்வது பொருந்தும்.

'சிறப்புக் காரியமாகவும் 'செம்பொருளைக் காண்பது' காரணமா கவும் இருப்பினும்' சிறப்பென்னும் செம்பொருள்' என்று காரியத்தைக் காரணமாக உபசரிப்பது 'சிறப்பு'ப்பின் வரும் தொடர்ச்சியான வீட்டின்பத்திற்காக அமைத்துக் கொண்ட ஒரு தொடக்கமே யென்பதை அறிவித்தற் பொருட்டேயாகும்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர்

மு. சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
சுவடிப்புலம்-ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

வீரர்களுக்குரிய கற்கள் மக்கள் நடமாடும் வழிகளில் நாட்டப் பெற்றிருந்தமையும் 'அதர்தோறும்; 'அதர' எனக் குறித்தவற்றாலும், அவற்றை வழிச் செல்வார் நோக்குதல் 'ஆறு செல்வம்பலர் விட்டனர் கழியும், என்பதனாலும் புலப்படும்.

வீரர்க்கு நட்ட நடுகற்களையும் மக்கள் தெய்வமாகவே கருதிப்போற்றினர்

'செல்லும் தேஎத்து, பெயர் மருங்கு அறிமார்,
கல் எறிந்து, எழுதிய நல் அரை மராஅத்த
கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை' (மலைபடு. 394-396)

என்பது மலைபடுகடாம். இவ் அடிகளுக்கு, "கல்லை இடந்து கொண்டு அதனிடத்தே இவ்வாறே பொருதுபட்ட இன்னா னென்று அவன்பெயரை உலகம் அறிவதற்கு எழுதிய கடவுள், என்றும் "நல்ல அரையினையுடைய மராஅத்திடத்தனவாகிய என்றது மராமரத்தின் நிழலிலே நட்ட கல் என்றவாறு" என்றும், "அக்கடவுளின் தெய்வத் தன்மை மிக்கதன் கொடுமையால் பிற காடுகளை இகழும் பல வழிகளில்" என்றும் நச்சினார்க்கினியர் தரும் பொருளும் நடுகல் கடவுளாதலை நன்கு விளக்கும்.

'அரிது உண் கூவல், அம்குடிச் சீறூர்
ஒலி மென் கூந்தல் ஒள் நுதல் அரிவை
நடுகல் கை தொழுது பரவும்'
'சிலை ஏறட்ட கணை வீழ் வம்பலர்
உயர் பதுக்கு இவர்ந்த தகர் கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்
சுரனிடை விலங்கிய மரன் ஓங்கு இயவின்.
(அகம், 289 : 1 - 4)

என வரும் பகுதிகளால் நடுக்கல்லை மக்கள் பரவித் தொழுதலும் அதற்கு நாட்பலியிட்டுப் போற்றுதலும் நன்கு புலனாகும்.

வழிச்செல்லும் இரவலன் ஒருவனுக்கு, அவ்வழியிடைக் காணும் நடுகல்லைத் தொழுது செல்ல வேண்டும் என்றும், அவ்வாறு அவன் தொழுது போவானாயின் அவன் செல்லும் கொடுங்கானம் மழை பெய்தலால் குளிர்ந்து, அங்கே உண்டாம் மலர்த்தேன் உண்ண வண்டுகளும் மிகுதியாகச் சேரும் என்றும் அறிவுறுத்தப் படுகின்றான்.

'பெருங் களிற்று அடியின் தோன்றும் ஒருகண்
இரும் பறை இரவல ! சேறி ஆயின்,
தொழாதனை கழிதல் ஒப்புமதி ; வழாது
வண்டு மேம்படூஉம், இவ்வறநிலை ஆறே'
(புறம். 263 : 1 - 4)

எனவே, நடுகல்லில் உறையும் வீரத் தெய்வத்தைத் தொழுதால் மழை பொழிந்து நாட்டிற்கு நன்மை உண்டாகின்றமை காணலாம்.

நிரை கவர்ந்து செல்லும் வெட்சியாரை வீழ்த்து வெற்றி கொண்டு மாய்ந்த மறவர்களைப் புதைத்து, அம் மேட்டின் மேலே இட்டு மூடி வைத்த கற்களிலும் நடுகல்லைப் போன்றே கடவுள் உறைவதாகப் போற்றுகின்றமையும் தெரியவரும்.

'முனை ஆத் தந்து, முரம்பின் வீழ்த்த
வில் ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல் ஆண் பதுக்கைக் ; கடவுட் பேண்மார்
(அக. 35 : 5-7)

எனவரும் அகப்பாடற்பகுதி 'பதுக்கைக் கடவுளைச்' சுட்டுதல் காணலாம். இப்பாடல் அடிகளுக்கு,

"முனையிடத்து ஆவை மீட்டு, முரம்பின்கண்ணே வெட்சியாரை வீழ்த்த மறவரது பதுக்கை எனக் கூட்டுக; வலிய ஆண்மையால் இட்ட பதுக்கை ; பதுக்கைக் கடவுள் என்றான், பதுக்கைக் கல்லிற் கடவுள் உறைதலான்"

என்று எழுதியுள்ள பழைய உரைகாரர் தரும் குறிப்பும் ஊன்றி நோக்குதற்குரியது.

போரில் வீரமரணம் எய்திய அதிகமான் நெடுமான் அஞ்சியைக் குறித்து ஒளவையார் பாடிய கையறுநிலைப் பாடலில், அவனுக்காகக் கல்நட்டு வழிபடப் போகும் செய்தி குறிப்பிடுகின்றார்.

'இல்லாகியரோ, காலை மாலை :
அல்லாகியர் யான் வாழும் நாளே :
நடுகல் பீலிசூட்டி, நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன்கொல்லோ
கோடுஉயர் பிறங்குமலை கெழீஇய
நாடு உடன் கொடுப்பவும் கொள்ளாதோனே?"

(புறம். 232)

என்பது ஔவைவாக்கு. இங்ஙனமன்றி வடக்கிருந்து உயிர் நீத்த கோப்பெருஞ்சோழனுக்கும் கல்நட்டமையைப் புறநானூற்றில் காணலாம். (புறம். 221, 222, 223). இவனைக் குறித்து இரங்கிப் பாடும் பொத்தியார்,

நனந்தலை உலகம் அரந்தை தூங்க,
கெடு இல் நல் இசை சூடி,
நடுகல் ஆயினன் புரவலன் (புற. 221 : 11-13)

என்கிறார். இங்கே போர்க்களத்தில் இறவாது வடக்கிருந்து உயிர் நீத்த மன்னனுடைய நடுகல்லைக் காண்கிறோம். இஃது இறந்தார் பொருட்டு இக் காலத்தும் நிகழ்த்தும் 'கல்லெடுப்பு' போன்றதொரு சடங்காகுமா என்பது ஆழ்ந்து நோக்குதற்குரியது.

இனி, நடுகல்லுக்கு மக்கள் ஆற்றிய வழிபாட்டினை நோக்குவோம். நடுகல்லுக்கு நன்னீர் கொண்டு நீராட்டுகின்றனர். (புற. 329 : 3 அக. 269 : 8) : பஞ்சளை அதன் மேல் பூசுகின்றனர் (அக. 269 : 9) : அதிரல்பூ (அக. 229 : 2-3), சரந்தைட்பூ (புற. 261 : 13 - 14) வேங்கைப்பூ (புற. 265 : 3 - 4), செந்நிறப் பூக்கள் (புற. 264 : 2) ஆகியவற்றால் தொடுத்த கண்ணி, மாலை ஆகியவற்றை சாத்துகின்றனர் (கண்ணி. ஆக, 343 : 6 ; புற. 264 : 2 ; மாலை புற. 263 : 3-4) கல்லின் மேலாகத் துணியாலாகிய பந்தரும் இடுகின்றனர்: (புற. 260:28) மயிற்பீலியும் சூட்டுகின்றனர் (அக. 35 : 8; 67 : 10; 131 : 11 ; புற. 232 : 3, 260 : 26 ; 264 : 3). வேலாயுதத்தை நடுகல்லின் பக்கலில் ஊன்றி, அதனோடு பரிசையையும் உடன் வைக்கின்றனர் (அக. 67 : 11, 131 : 12, பட்டன. 79-80), நறுமணமுள்ள தூபம் புகைக்கப்படுகின்றது. (புற. 329 : 4) ; துடியையும் முழக்குகின்றனர் (அக. 35 : 8), தோப்பிக்கள்ளும், இல்லில் அடும் பிறகள் வகைகளும் நாரால் அரித்தெடுக்கப்படும் மதுவகையும் ஆன பல திறப்பட்டகள் வகைகள் படைக்கப்படுகின்றன. (அக. 35 : 9 ; 131 : 12 ; புற. 232 : 4, 329 : 1 - 2)

வெள்ளாட்டைப் பலியாகக் கொடுக்கின்றனர் (அக. 35 : 9) இங்ஙனமாக நடுகல்லை வழிபடும் வழக்கம்பலபட பேசப் பட்டிருக்கின்றது. நடுகற்செய்திகள் சங்க இலக்கியங்களில் அக நானூற்றிலும் புறநானூற்றிலும் தான் மிகுதியாகப் பேசப் பட்டிருததலும் கூர்ந்து நோக்குதற் குரியதாம்.

இங்கே குறித்த நடுகல் வழிபாட்டு முறைகளை நமக்கு உணர்த்தும் பாடற்பகுதிகள் பின்வருமாறு :

'இல் அடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லின் நாட்பலி ஊட்டி.
நல் நீராட்டி, நெய்ந்நறைக் கொளீஇய,
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்
அருமுனை இருக்கைதது ......' (புற. 329 : 1-5)

'உயா இசை வெறுப்பத தோன்றியபெயரே,
மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி,
இடம் பிறர் கொள்ளாச் சிறுவழி
படம் செய் பந்தர்க் கல்மிசை யவ்வே' (புற. 260:25-28)

'நாகுமுலை அன்ன நறுபூங் கரந்தை
வீரகறி யாளர் மரபின் சூட்டி,
நிரை இவண் தந்து நடுகல் ஆகிய
வென்வேல் விடலை .........' (புற. 261:13-16)

'பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி,
மரல வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியோடு,
அணிமயிற் பீலி சூட்டி, பெயர் பொறித்து,
இனி நட்டனரே கல்லும்' (புற. 264:1-4)

'ஊர் நனி சிறந்த பார்முதிர் பறந்தலை,
ஓங்கு நிலை வேங்கை ஒள் இணர் நறுவீப்
போந்தை அம் தோட்டின் புனைந்தனர் தொடுத்து,
பல் ஆன் கோவலர் படலை சூட்ட,
கல் ஆயினையே கடுமான் தோன்றல்' (புற. 265:1-5)

'வல் ஆன் பதுக்கைக் கடவுள் பேண்மார்
நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,
தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்'
(புற. 35:7-9)

'பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேல் ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்'
(அக. 67:10–11, 131:11-12)

'கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி,
நடுகல்லின் அரண் போல' (பட்டின. 79-80)

'நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல் இடம் குயின்ற பல்பெயர் மண்ணி,
நறு விரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்பு கொண்டு அறுத்த ஆர் நார் உரிவையின்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண்டு ஆர்ப்பச் சூட்டி, கழற்கால்
இளையர் பதிப் பெயரும் அருஞ்சுரம்' (அக. 269:7-13)

'சிலை ஏறட்ட கணை வீழ் வம்பலர்
உயர் பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்' (அக. 289:1-3)

'நடுகல் பீலி சூட்டி, நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ,
(புற. 232 ; 13-4)

மலைகளிலும் குன்றுகளிலும் இருந்து கற்களைப் பிளந்து எடுத்து வந்து, உருச் சமைத்து, மறவனின் பெயரையும் பெருமையையும் பொறித்து, பூவும் புகையும் பிற பலிகளும் கொடுத்துத் துடியை முழக்கி, நடுகல்லில் அமைந்த வீர தெய்வத்தை வழிபட்டமையை இதுவரையிலும் விரிவாகப் பார்த்தோம். இங்ஙனமின்றி நிலையான பாறைகளின் மேலேயே வீரரின் உருவைச் சமைத்து, அவருடைய பெயர் புகழ்களைப் பொறித்தலும் உண்டு என்பதை 269 ஆம் அகப் பாட்டில் காணலாம். நட்டுவைத்தாற் போல் தோன்றும் இயற்கையாக அமைந்த நீண்ட கல்லின் மீது செதுக்கி அமைத்த வீரப் புகழை இப் பாட்டு குறிப்பிடுகிறது பாடற்பகுதி வருமாறு:

'ஏறுடை இனநிரை பெயர, பெயராது,
செறி சுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுகணாளர் நல்இசை நிறுமார்,
பிடி மடிந்தன்ன குறும்பொறை மருங்கின்,
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல்இடம் குயின்ற பல் பெயர் மண்ணி,
நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்புகொண்டு அறுத்த ஆர்நார் உரிவையின்
செம்பூங் கரந்தைபுனைந்த கண்ணி
வரி வண்டு ஆர்ப்பச் சூட்டி, கழற்கால்
இளையர் பதிப் பெயரும் அருஞ்சுரம்: (அக. 269 :3-13)

இப்பாடலில், "நடாஅ நெடுங்கல் அகலிடம் குயின்ற" என்றதனால், பல்லவர் காலத்திற் போல இயல்பாய

பாறையைக் குடைந்து படிவம் இயற்றும் வழக்கு அஞ்ஞான்றும் இருந்தது என்பது புலனாகின்றது'' என்று நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரும் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையும் சேர்ந்து உரைவகுத்த அகநானூற்றுப் புத்துரையில் எழுதியிருப்பதும் ஆராயத் தக்கதோர் அரிய செய்தியாகும்.

## சதுக்கம், சந்தி, மன்று, பொதியில் கந்து

முருகாற்றுப் படையுள் முருகன் உறைந்து காட்சி தரும் இடங்களைக் கூறுமிடத்து நக்கீரர்,

'சதுக்கமும் சந்தியும், புதுப்பூங் கடம்பும்,
மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்
(முருகு, 225-226)

என்று கூறியுள்ளார். இவையெல்லாம் மக்கள் சேர்ந்து வாழும் ஊரகத்தே உள்ளனவாகும். இவற்றுள் சதுக்கம் என்பது நான்கு தெருக்கள் கூடும் நாற்சந்தி. சந்தி என்பது முச்சந்தி, ஐஞ்சந்திகளைக் குறிக்கும். ஊர்க்கு நடுவாய் எல்லாரும் வந்து கூடியிருக்கும் மரத்தடியே மன்று. பொதியில் என்பது அம்பலம் என வழங்கும் பொது இடம். பொதியிலில் மரம் இருப்பது உண்டாயினும் மன்றத்தில் கட்டடம் எதுவும் இன்றித் திறந்த வெளியாக இருக்கும். பொதியிலில் அமைத்து வழிபடப்பெறும் மூர்த்தமே கந்து என்பது.

புற்றுடைச் சுவர புதல் இவர் பொதியில்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து' (அக 307 : 11-12)

என்பதனால் பொதியில் சுவர் எழுப்பி அமைக்கப்பட்ட பொது இடம் என்பதும், அப்பொதியில் பாழ்பட்டு அங்கு வந்து வழிபடுவார் அற்றுப் போகவே அப் பொதியில் கந்துடை நிலையில் நின்ற தெய்வமும் அதைத் துறந்து சென்றுவிடுகிறது என்பதும் தெரிய வருகின்றன.

மன்றம் அந்தந்த ஊர்களில் எல்லாரும் கூடும் நிலையில் வளர்ந்திருந்த மரங்களில் ஏதோ ஒன்றின் அடியாதல் பெறப்படும்.

'மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள், (குறு 87 : 1)
'இரத்தி நீடிய அகன்தலை மன்றம்' (புற. 34-12)
'மறுகுடன் கமழும் மதுகை மன்றத்து,
அலந்தலை இரத்தி அலங்கு படு நீழல்,

கயந்தலைச் சிறாஅர் கணைவிளை யாடும்
அருமிளை இருக்கையதுவே' (புற. 325 : 10-13)

எனவரும் பாடற்பகுதிகள் மன்றத்துறை தெய்வ நிலையைக் குறிப்பன. நெய்தல் நிலத்தில் பனைமரத்தடியே மன்றமாக அமைகிறது.

'ஒலி அவிந்து அடங்கி யாமம் நள்ளென,
கலி கெழு பாக்கம் துயில் மடிந்தன்றே ;
தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை வடவுள் மடற் குடம்பை
துணை புனர் அன்றில் ... ... (நற். 303 : 1–5)

இங்கே பனைமரம் நிற்கும் மன்றத்தைக் காண்கிறோம். "தம் குலதெய்வத்தையும் ஊர்ப் பொதுத் தெய்வத்தையும் பனையிலேற்றுவித்து வணங்கிவருவது தொன்றுதொட்டு வரும் நெய்தல் நிலத்து வழக்கு" என்று இப் பாடலின் உரையில் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

மேலும், நெய்தல் நில மக்கள் சுறாமீன் கொம்பை நட்டு, அதனிடத்து ஏற்றிய தெய்வத்தை வழிபட்டு, வெண்டாளி மாலையும் தாழை மலரும் புனைந்து, பனங்கள்ளைக் குடித்து விளையாடுவதும் உண்டு. இவ் வழக்கத்தை,

'குறுங்கூரைக் குடி நாப்பண் ;
நிலவு அடைந்த இருள் போல,
வலை உணங்கும் மணல் முன்றில்
வீழ்த் தாழைத் தாட் தாழ்ந்த
வெண் கூதாளத்துத் தண்பூங் கோதையர்,
சினைச் சுறவின் கோடு நட்டு,
மனைச் சேர்த்திய வல் அணங்கினான்,
மடற் றாழை மலர் மலைந்தும்,
பிணர்ப் பெண்ணைப் பிழிமகிழ்ந்தும் ;
புன்தலை இரும் பரதவர்
பைந் தாழை மாமகளிரொடு,
பாய் இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது,
உவவு மடிந்து உண்டு ஆடியும்' (பட்டின. 81-93)

எனவரும் பட்டினப் பாலை அடிகளில் காணலாகும்.

பொதியில் எனப்படும் ஊரம்பலத்தில் சித்திர வேலைப் பாடுகள் செய்யப்பெற்றிருந்தன. 'எழுது எழில் அம்பலம்'

(பரி 18-28) என்பது பரிபாடல். பொதியிலிலே தெய்வம் உறை கந்தில் வழிபாடு இயற்றியது போலவே, அங்குள்ள சுவரில் கடவுளின் உருவத்தை எழுதியும் வழிபடுவர் என்றும் தெரியவருகிறது. பாழ்பட்ட மன்றத்திலிருந்து 'எழுது அணி கடவுள் போகலின், அங்குப் பலி கொடுப்பார் இன்றிப் பலிபீடம் அழகிழந்து கிடந்ததை 167-ஆம் அகப்பாட்டு தெரிவிக்கிறது. இங்கே எழுதணி கடவுள் பொதியிலை விட்டுச் செல்லுதற்குக் காரணம் அது பாழ்பட்டு மனிதர் அங்கு வாராது ஒழிந்ததுதான்.

மேலும், இந்தப் பாட்டு பொதியில் கட்டட அமைப்பையும் ஒருவாறு வெளிப்படுத்துகிறது. வழிப்பறித்துண்ணும் கொடியோரது துன்பத்திற்கு ஆற்றாது ஓர் ஊரிலுள்ளார் குடி பெயர்ந்து சென்றுவிடுகின்றனர். அதனால் மன்றம் பீர்க்கு முதலியன படர்ந்து புதல் சேர்ந்து பாழ்பட்டுக் கிடக்கிறது. அதன் பக்கத்தில் உள்ள முருங்கையைத் தின்ன வந்த காட்டு யானை பிடரியினால் பொதியிலின் சுவரில் தேய்க்கின்றது. ஏற்கெனவே பலமிழந்திருந்த செங்கல்லால் கட்டப்பற்ற சுவரின் மேலுள்ள விட்ட மரம் விழுந்துவிடுகிறது. இதுவரையில் சுவரின் மேலுள்ள விட்டத்தைச் சேர்ந்திருக்கும் மாடங்களில் வாழ்ந்த கரும்புறாக்கள் தங்கும் இடம் இல்லாமையால் அதைத் துறந்து விட்டு வேறு காப்பிடம் நாடிச் சென்று விடுகின்றன. அப் பொதியிலின் சுவரில் எழுதப்பெற்றிருந்த அழகிய கடவுளும் பலியிட்டு வணங்குவார் இல்லாமற்போகவே புறப்பட்டுச் சென்றுவிடுகிறது. பலிபீடத்தைக் கொண்ட பொதியிலின் திண்ணையிடம் மெழுகாமையால் அழகிழந்து காணப்படுகிறது குட்டி போட்ட நாய், தன் குட்டிகள் துள்ள அங்கே தங்கி யிருக்கிறது. அப் பொதியில் மேல் அமைந்திருந்த கைமரங்களையும் கறையான் மூடி உண்டுவிடுகிறது; இதனால் கூரையும் விழுந்து கிடக்கிறது. இதனால் மக்கள் உவந்து வாழ்ந்த காலத்து அப் பொதியில் எவ்வகையான பொலிவுடன் இருந்திருக்கும் என்பதை நாம் ஊகித்து அறியலாம். இங்குக் குறித்த பாழ்பட்ட பொதியில் காட்சியைத் தெரிவிக்கும் பாடற்பகுதியைப் பார்ப்போம்.

-சாத்து எறிந்து

அதர் கூட்டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடு வில் ஆடவர் படுபகை வெரீஇ,
ஊர் எழுந்து உலறிய பீர் எழு முதுபாழ்,
முருங்கை மேய்ந்த பெருங்கை யானை

வெரிந் ஓங்கு சிறுபுறம் உரிஞ, ஒல்கி
இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென,
மணிப் புறாத் துறந்த மரம் சேர் மாடத்து
எழுது அணி கடவுள் போகலின், புல்லென்று
ஒழுகு பலி மறந்த மெழுகாப் புன்திணைப்
பால் நாய் துள்ளிய பறைக்கட் சிற்றில்,
குயில் காழ் சிதைய மண்டி, அயில் வாய்க்
கூர்முகச் சிதலை வேய்ந்த
போர் மடி நல்இறைப் பொதியிலானே' (அக. 167:7-20)

இங்ஙனமே பாழ்பட்ட ஒரு பொதியிலில் உள்ள கந்தினைப் பற்றியும் மற்றோர் அகநானூற்றுப் பாடல் விவரிக்கிறது. பாழ்பட்ட பொதியிலில் நாட்டப் பெற்றிருந்த கந்தின் மேல் ஆண்மான் தன் உடம்பை உராய்ந்து கொள்கிறது. இதனால் அந்தக் கந்து அசையும் நிலையை அடைந்துவிடுகிறது. சுரைக் கொடி படர்ந்த அம்பலத்தையுடைய அந்தச் சீறூர் முன்பு அழகிய குடியிருப்புகளைக் கொண்டதாயிருந்ததாம் இப்பொழுது ஊரார் இடம் பெயர்ந்து விட்டனர். அங்கே நாட்பலி முதலியன செய்து வழிபடுவார் இல்லை. அதனால் அங்குள்ள செங்கல்லால் ஆன பலிபீடம் வெளிறிய காட்சி தருகிறது. அதன் பக்கத்துள்ள ஆலமரத்தின் விழுதுகளின்மேல் கோடைக்காற்று கனவேகத்துடன் மோத அப் பொதியிலின் இறப்பில் துணையுடன் வாழ்ந்த புறாக்களின் மேல் அடித்து, அவற்றை ஓட்டுகின்றனவாம்.

— தூங்குநிலை,
மரைஏறு சொறிந்த மாத் தாட் கந்தின்
சுரை இவர் பொதியில் அம்குடிச் சீறூர்
நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை
புரிசை மூழ்கிய பொரி அரை ஆலத்து
ஒருதனி நெடுவீழ் உதைத்த கோடை
துணைப் புறா இரிக்கும் தூய்மழை நனந்தலை'
(அக. 287:3-9)

இங்கே பொதியிலில் உள்ள கந்து அசையும் நிலைபடக் கலைமான் சொறிந்தது என்பதனால், கந்து என்பது அப் பொதியிலில் வழிபடுதற்கு நாட்டப் பெற்றிருந்த ஒரு தறியே யாதல் விளங்கும். அதன் அடி வழிபடுதற்குரிய பொருள்கள் முதலியன பட்டதன் ஏதுவாகக் கருநிறம் வாய்ந்திருத்தல் வேண்டும் என்பது 'மாத்தாள்' என்னும் அடைமொழி கொண்டு ஊகிக்கலாம்.

பொதியிலில் ஊருக்குப் புதிதாய் வருவோர் தங்குதலும், அங்கு மகளிர் முதலியோர் வந்து வழிபாடு செய்தலும் உண்டு. இதனை,

'கொண்டி மகளிர், உண்துறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்,
மலர் அணி மெழுக்கம் ஏறிப் பலர் தொழ,
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்'

(பட்டின. 246–249)

எனவரும் பட்டினப்பாலையடிகள் புலப்படுத்தும். பகைவர் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட கொண்டி மகளிர் மக்கள் நீருண்ணும் நீர்த்துறையில் சென்று முழுகி, பின் சென்று பொதியல் திண்ணையை மெழுகுகின்றனர். அந்தி வேளையில் அணையாத விளக்கையும் அங்கு ஏற்றி வைக்கின்றனர். கந்திற்கு மலர் அணியப்பட்டிருக்கிறது. புதியவர்கள் தொழுதற்பொருட்டு அந்த அம்பலத்திலே ஏறித் தங்கு கின்றனர். அரசன் பகைவரை வென்று தனது ஆற்றல் பற்றிக் கொணர்ந்த மகளிரைத் தெய்வத்திற்குப் பணிவிடை செய்ய நியமித்தான் என்பதும் நமக்கு இதனால் விளங்குகிறது. மேலே, குறித்த பட்டினப் பாலை அடிகளில் வரும கந்து என்பதற்குத் 'தெய்வம் உறையும் தறி' என நச்சினார்க்கினியர் விளக்கம் தருகிறார். இதனால் மரத்திலிருந்து . தறித்து எடுக்கப்பட்ட தூண் போன்ற பொருளேபொதியில் தெய்வம் உறையும் கந்தாக நடப்பட்டது என்று கொள்ளலாம்.

## இல்லுறை கடவுள்

ஊர்களில் உலவும் அணங்குகள் இல்லுறை தெய்வங் களாம். 'அணங்கு வழங்கும அகல் ஆங்கண்' (மதுரை. 164) என்பதற்கு 'இல்லுறை தெய்வங்கள் உலாவும அகன்ற ஊரிடத்து' என்று பொருள் விரிப்பார் நச்சினார்க்கினியர்.

'கொழுங்குடிச் செல்வரும் பிறரும் மேஎய'
மணம் புணர்ந்து ஓங்கிய, அணங்குடை நல்இல்'

(மதுரை. 577-578)

எனவரும் மதுரைக் காஞ்சியடிகள், வளம் மிக்க குடிப் பிறந்த செல்வரும் அவர் வழிச் சார்ந்த பிற செல்வர்களும் வாழும இல்லங்கள் தெய்வங்களை உடையனவாயிருக்கின்றன என்பதைக் குறிக்கின்றன. இல்லத்தின் வாயில் நிலைகளிலும் தெய்வம் நிலைபெற்றிருப்பதாகக் கொண்டாடினர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## தொல்காப்பியச் செய்யுளியல் காண்டிகையுரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

சூ. 44 : உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மையான

கருத்து : மேல் எழுத்தளவையான் வகுக்கப்பெற்ற நாற்சீரடிகளுள் ஐவகைச் சீர்களின் கண்ணும் எழுத்தெண்ணும் முறைமை கூறுகின்றது.

உரை : உயிர்ப்பிசை அல்லாத பதினெட்டுப் புள்ளி எழுத்தும் ஆய்தப்புள்ளியும் (உம்மையான்) அரை மாத்திரை உயிர்ப்பொலி உடைய குற்றியலிகரமும் குற்றியலுகரமும் அலகாக எண்ணப்பெறா. காரணம் என்னை எனின்? அவை உயிரும் உயிர்மெய்யும் போலத் தனித்தியங்கலும் ஒரு மாத்திரை முதலான இசைபெறுதலுமாகிய உயிர்த்திறமும் இன்மையான் என்க.

உயிர்மெய் என்பது உயிரைத் துணைக்கொண்டு தனித்திசைக்கும் மெய்யெழுத்தின் ஒருநிலை என்பது எழுத்ததிகார உரையுள் விளங்கப்பெற்றது.

எனவே குறளடி முதலாகக் கழிநெடிலடி ஈறாக வரும் நாற்சீரடிகளுள் எழுத்தெண்ணுங்கால் உயிரும் உயிர்மெய்யுமே எண்ணப்பெறும், ஏனைப் புள்ளியும் (மெய்) சார்பு எழுத்தும் எண்ணப்பெறா என்பது புலனாம்.

இனி உயிரளபெடையும் ஒற்றளபெடையும் "அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே" என்றதனான் அசைநிலை பெறுங்கால் எண்ணப்பெறுமென்பதும் அல்லாதவிடத்து எண்ணப்பெறா என்பதும் பெறப்படும்.

(பேராசிரியரும் நச்சரும் வடமொழியாப்பியலை நோக்கிக் கட்டளை என்பதொரு இலக்கண அடியைக் கற்பித்துக் கொண்டு தத்தமக்கு வேண்டியவாறு கூறும் விளக்கங்கள் தமிழ் மரபன்றென்பதைச் சான்றோரது இலக்கியங்களை நோக்கி உணர்க.)

சூ. 45 : வஞ்சியடியே இருசீர்த்தாகும்.

கருத்து : நேர்நிலை வஞ்சிக்கு ஆறுபாகும் என அதிகரித்து வைத்த வஞ்சிடிக்கு இலக்கணம் கூறுகின்றது.

உரை : நேர்நிலை வஞ்சிப்பாவிற்குரிய வஞ்சியடி இரு சீர்களை உடையதாகும்.

ஒரு சீரொடு மற்றொரு சீர் நேர்ந்த அளவானே அவ்வடி வஞ்சிப்பாவிற்குரியதாகி நின்றமையின் அதனைக் கொண்டு நடக்கும வஞ்சிப்பா நேர்நிலை வஞ்சி எனப்பட்டது. நேர்நிலை எனினும் சமநிலை எனினும் ஒக்கும். ஆசிரிய அடி முதலிய வற்றைப் பிரித்தலின் ஏகாரம் பிரிநிலை.

(எ-டு) மனைமாட்சிய விரைபுரவியொடு
..................................................
பெருந்தண்பணை பாழாக (புறம் - 16) என வரும்.

சூ. 46 : தன்சீர் எழுத்தின் சின்மை மூன்றே

கருத்து : வஞ்சிச்சீர்க்கு குறைந்த எழுத்தளவு கூறுகின்றது.

உரை : வஞ்சிச்சீர்க்கு எழுத்தளவையான் சிற்றெல்லை மூன்றேயாம். பேரெல்லை மேற்கூறப்பட்டது. (சூ. )

(எ-டு) "பெருந்தண்பனை பாழாக" (புறம் 16) எனவரும். நுந்தைகாடு எனக்காட்டி ஈரெழுத்தானும் வரும் என்றார் பேராசிரியர் ஆண்டு நுந்தை முற்றுகரமாதலன்றிக் குற்றுகரமாகாதென்க.

சூ. 47 : முச்சீரானும் வருமிட னுடைத்தே

கருத்து : வஞ்சியடிக்கொரு புறனடை கூறுகின்றது.

உரை : மேற்கூறிய வஞ்சிப்பாவின் அடி மூன்று சீரானும் வரும் இடனுடைத்தாகும்.

எச்சஉம்மை இழிபுணர்த்தி நின்றது. முச்சீரான் வரும். வஞ்சியை வியனிலை வஞ்சி எனவும் வழங்குப.

(எ-டு) தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோள்மேல்
(யா. வி. ப. 108) எனவரும்.

சூ. 48 : அசைகூன் ஆகும் அவ்வயினான

கருத்து : வஞ்சயடிக்கண் நிகழ்வதோர் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : மேற்கூறிய இருவகை வஞ்சியடிக்கண்ணும் கூன்வரின் அசைச்சீரே கூனாகி வரும்.

பொதுப்படக் கூறியதனான் கூன் அடிமுதற்கண்ணும் இறுதிக்கண்ணும் வருமெனக் கொள்க.

(எ-டு) வாள், வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப்போன்றன
களிறு, "கதவெறியாச் சிறந்துராஅய்"
தேரோடத் துகள்கெழுமின, தெருவு. என
வரும்.

சூ. 49 : சீர்கூ னாதல் நேரடிக் குரித்தே

கருத்து : நேரடிக்கண் சீர் கூனாக வருமென்கின்றது.

உரை : சீர்கூனாக வருதல் நேரடிக்குரியதாகும்.

(எ-டு) அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே

'உரித்தே' என்றதனான் உரித்தன்றி வஞ்சியடிக்கண் ஒரோ வழிச் சீர்கடனாக வரினும் கொள்க.

(எ-டு) "உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும்"
எனவரும்.

சூ. 50 : ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகைமைய வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே

கருத்து : ஐவகை அடிகளும் தளை வழுவின்றி விரியும் தொகையளவு கூறுகின்றது.

உரை : நாலெழுத்தடி முதலாக இருபதெழுத்தடி ஈறாக வகுக்கப்பெற்ற குறளடி முதலாகிய ஐவகை நாற்சீரடிகளையும் விரிக்குங்கால் அங்ஙனம் எழுத்தளவையானமைந்த பதினேழு வகையடிகளிடத்தும் நின்ற சீர்கள் புணர்ந்து தளை கொள்ளு மிடத்து எழுபது வகைமையால் நேரும் ஓசை வழுக்கள் இலவாய் வருவன அறுநூற்றிருபத்தைந்து அடிகளாகும்.

மெய் என்றது எழுத்தினை, நிலம் என்றது அடியினை

"அடியுள்ளனவே தளையொடு தொடையே" என்பதனாற் பின்னர்ப்பதின்மூவாயிரத்து எழுநூறு தொடை ஆமாறு விரித்தற்கு ஏற்ப ஈண்டுத்தளை வழுவில்லா அடிகள் வரையறை செய்யப்பெற்றன.

வழுநேரும் எழுபது வகைமையாவன :-
ஓரெழுத்து முதல் ஐந்தெழுத்து வரை சீர்கள் எண்பத்து நான்காம். என்னை ? இயலசைச்சீர் 2, உரியசைச்சீர் 2, இயற்சீர் 10, ஆசிரியஉரிச்சீர் 6, வெண்சீர் 4, வஞ்சிச்சீர் 60 ஆகிய 84. அச்சீர்களுள் இயலசைச்சீர் இரண்டும் நாற்சீரடிக்கண் நின்று சீராக நிரம்பாமையின் அவை களையப்பெறும். வெண்சீர் நான்கும் தளை கொள்ளுமிடத்து நிரையசை இயல்பினவாம் ஆதலின் அவை இயற்சீரின் பாற்பட்டு அடங்கும். அசைச்சீர் தளைகொள்ளுமிடத்து இயற்சீர் போலக் கொள்ளப்படுமேனும் அவை முற்றுகரக், குற்றுக்கரங்களான் வேறுபடுதலின் இயற்சீருள் அடக்காது வேறாகக் கொள்ளப் படும் என்றறிக. இனி வஞ்சியுரிச்சீர் அறுபதனுள் ஐந்தெழுத் தின்மிக்குவருவன நிரையீற்றுள் நான்கும் நிரைபீற்றுள் நான்கும் ஆக எட்டாம். ஆகலின் அவையும் களையப்படும். ஆக எஞ்சியவை எழுபது சீர்களாம்.

இவ்வெழுபது சீர்களும் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா ஆகிய பாக்களுக்குரியவை உரியவையாய், நின்ற சீரும் வருஞ் சீருமாய்ப் புணர்ந்துதளை கொள்ளுமிடத்து ஒரு பாவிற்குரிய அடியுள் ஏனைப்பாக்களின் ஓசைபுகின் வழுவாம். அங்ஙனம் எழுபது வகைச் சீர்களான் நேரும் வழு எழுபது வகையாகும்.

இனி அவ்எழுபது வகையின் வழுநேரா வண்ணம் அறுநூற்றிருபத்தைந்து அடிகள் விரியுமாறு :-

மேற்கூறிய உரியசைச்சீர், இயற்சீர் ஆசிரியஉரிச்சீர், வெண்சீர், வஞ்சியுரிச்சீர் ஆகிய ஐந்து சீர்களையும் நிறுத்தி இரண்டாம் சீரைப் புணர்த்தி உறழ இருபத்தைந்தாகும் அவற்றொடு மூன்றாஞ்சீரைப் புணர்த்தி உறழ நூற்றிருபத்தைந்தாகும் அவற்றொடு நான்காம் சீரைப் புணர்த்தி உறழ அறுநூற்றிருபத்தைந்தடிகளாம். "தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா" என்பதனான் ஒத்த சீர்கள் வரின் வழுவின்றாம். பிற சீர்கள் வரின் தளை வழுவின்றி அமைதல் வேண்டுமென்க.

அசைச்சீரும், வெண்சீரும் தளை நிலைக்கு இயற்சீரோடு ஒப்பித்ததன்றிச் சீர்நிலைக்கண் வேறாகவே நிற்குமென அறிக.

(எ-டு) "பருத்தி வேலிச் சீறூர் மன்னன்" இயற்சீரால் வந்த ஒன்பது எழுத்துச் சிந்தடியாகிய ஆசிரியவடி தளை வழுவின்றி வந்தது.

"வேட்டம் பொய்யாது வலைவளம் சிறப்பப்
பாட்டம் பொய்யாது பரதவர் பகர" இயற்சீரும்

வெண்சீருமாய்ப் பதினோரெழுத்து அளவடியான் வந்த ஆசிரிய அடிகள் தளை வழுவின்றி வந்தன.

"ஆர்கலி யாணரத் தாயினும் தேர்கெழு"
ஆசிரியத்தளையும் வெண்டளையும் விரைவி வழுவியது
இரும்பனந் தீம்பிழி உண்போர் மகிழும்.
இயற்சீரான்வந்த பன்னிரண்டெழுத்து அளவடி
வெண்டளை வழுவாது வந்தது.

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்"
பதினாறெழுத்தால் வந்த நெடிலடி ஆசிரியத் தளை வழுவாது வந்தது.

களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை.
ஆசிரிய உரிச்சீரும் இயற்சீருமாய் அளவடியான் வந்த ஆசிரிய அடி தளை வழுவின்றி வந்தது.

"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு"
பத்தெழுத்தான் இயற்சீரும் வெண்சீருமாய் வந்த வெண்பாஅடித் தளை வழுவின்றி வந்தது

"புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்"
பதினான்கெழுத்தான் வந்த வெண்சீர் அளவடி தளை வழுவாது வந்தது

உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்கு"
இயற்சீரான் பத்தெழுத்தான் வந்த கலியடி வெண்டளை வழுவாது வந்தது.

"தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவு
முரைத்தனரே" வெண்சீரான்
கழிநெடி லடியான் வந்த கலியடி கலித்தளை வழுவாது வந்தது.

"அடிதாங்கு மளவின்றி அழலன்ன வெம்மையால்" வெண்சீரான் பதினான்கெழுத்தான் வந்த கலியடி வெண்டளை தட்டு வழுவி வந்தது.

வெண்பாவைத் தவிர ஏனைய பாக்களுள் தளை விரவி வரினும் அவை வழுவாகாதென்பதும் இங்ஙனம் எழுத்தளவை யானாகும் அடிக்கண் தளை வழுவாது வரும் அடிவகை இத்துணைய என்பதே இச்சூத்திரத்தின் பயன் என்பதும் அறிக.

சூ. 51 : ஆங்கனம் விரிப்பின் அளவிறந்தனவே
பாங்குற உணர்ந்தோர் பன்னுங்காலை.

கருத்து : மேற்கூறிய அடித்தொகைக்கு ஒரு புறனடை கூறுகின்றது.

உரை : எழுநிலத்தெழுந்த செய்யுட்களை செய்யும் பாங்கினை உணர்ந்தோர், பாக்களைப் பண்ணுங்காலை அவற்றைப் பதினேழு நிலத்தும் உள்ள ஐவகை யடிக்கும் சீர் வகையான் அடிஉறழ்ந்தாங்கு, குறளடி முதலாக ஒவ்வோரடிக் கும் எழுத்தளவையான் உறழ்ந்து விரிப்பினும், பதினேழ் நிலங்களையும் மூவகைப் பாக்களுக்கும் உரிமை கூறி யாங்கு வைத்துத் தனித்தனி விரிப்பினும் அவை அளவிறந்தனவாக விரியும்.

அஃதாவது பதினேழு நிலமும் ஆசிரியம்பெறும் என்னும் முறைமையால் எழுத்தளவையான் வைத்துப் பெருக்குங்கால் நாலெழுத்தால் ஒன்றும் ஐந்தெழுத்தால் மூன்றும் ஆறெழுத் தால் நான்கும் ஏழெழுத்தால் பன்னிரண்டும்ஆக இங்ஙனம் அளவின்றிப் பெருகுதலும், ஆசிரியடி பதினேழு வெண்பா அடி 8, கலியடி 8 ஆகவைத்து அவற்றைச் சீர்களொடு உறழ அளவின்றிப் பெருகுதலும் காண்க.

இச்சூத்திரத்திற்கு விளக்கம் கூறுங்கால் இவ் ஆசிரியர் அடி எனக் கூறாத ஐஞ்சீரடி அறுசீரடிகளை வைத்து அவற்றைப் பெருக்கின் அளவிறந்தனவாகும் என்றனர் உரையாசிரியன் மார். அது மேற்கோள்மலைவாதலை அறிக.

சூ. 52 : ஐவகை அடியும் ஆசிரியக் குரிய

கருத்து : குறளடி முதலாய ஐந்தடிகளும் ஆசிரியப்பாவிற்கு வருமென்கிறது.

உரை : மேல் எழுத்தளவையாற் கூறிய குறளடி முதலாகக் கழிநெடிலடி யீறாக உள்ள ஐவகை அடிகளும் ஆசிரியப்பாவின்கண் வரற்குரியவாகும்.

(எ-டு) "தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து"
"ஆறுசூடி நீறு பூசி" இவை குறளடி

போது சாந்தம் பொற்ப ஏந்தி
கொங்குதேர் வாழ்கை அஞ்சிறைத்தும்பி —
இவை சிந்தடி

காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
யாவரும் விழையும் பொலந்தொடிப்புதல்வனை ...
இவை நேரடி

ஏற்றுவல னுயரிய எரிமருள் அவிர்சடை
தேன்றூங்கிய உயர்சிமைய மலைஞாறிய
வியன்ஞாலம் - இவை நெடிலடி

நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய
புகன்மறவரும்
அமர்காணின் அமர்கடந்தவர் படைவிலக்கி
எதிர்நிற்றலின்
இவை கழிநெடிலடி

ஆசிரியப்பாவிற்கு ஐவகை அடிகளும் உரியவாயினும் குறளடியும், சிந்தடியும், கழிநெடிலடியும் பயின்றுவாரா, அளவடியும் நெடிலடியும் பயின்று வருமெனக் கொள்க.

சூ. 53 : விராஅய் வரினும் ஒரூஉ நிலை இலவே

கருத்து : மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

உரை : ஐவகை அடியும் ஆசிரியத்துள் வருங்கால் ஆசிரிய உரிச்சீரும் இயற்சீருமாய் ஆசிரியத்தளையாயே வருதலின்றிப் பிறசீர்களும் தளைகளும் விரவிவரினும் நீக்கும் நிலைமைஇல.

• அவற்றை இசையொடு சேர்த்தி அகவலோசையாற் கூறிக் கொள்ளப்படும் என்க.

இனி, குறளடி முதலாக ஐந்தடிகளும் நிரலே வருதலன்றி விரவிவரினும் நீக்கும் நிலைமைஇல எனப் பொருள்கூறின் அஃது வெள்ளுரையாம். இந்நூற்பாவிற்கு மேலதே பொருள் என்பதை வருஞ் சூத்திரத்தானும் உணரலாம்.

சூ. 54 : தன்சீர் வகையினும் தளநிலை வகையினும்
இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய
தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா

கருத்து : மேல்விராய் வருமென்ற ஐவகை அடிகளும் ஓசை யான் விரவி வருமாறு கூறுகின்றது.

உரை : தன்சீராகிய ஆசிரிய உரிச்சீர் வரும் வகையானும் பிற சீர்கள் ஆசிரியத்தளையொடுவரும் வகையானும் இயற்சீர் வரும் வகையானும் வருபவை ஆசிரியத்துள் ஐவகை அடிகட்கும் உரியவாகும். அவ்வழித் தன்சீராகிய ஆசிரிய உரிச்சீர்களே வருமிடத்துத் தளைவகை காணல் வேண்டா என்றவாறு.

எனவே பிறசீர்கள் வருமிடத்துத் தளைவகையான் ஓசை காணல் வேண்டுமென்பதும் தன்சீ ருள்வழி அவையே ஓசையைப் பிறப்பித்தலின் தளை காணல் வேண்டா என்பதும் புலப்படும்.

நேராய் ஒன்றுவதும் நிரையாய் ஒன்றுவதும் என ஆசிரியத் தளை இரு வகைப்படுதலின் "தளைவகை" எனப்பட்டது.

இச்சூத்திரத்து இறுதியடியைப் பிரித்து தனிச் சூத்திரமாக உரைப்பார் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும். உரை யாசிரியர் கொண்ட முறையே நூல்நெறிக் கொத்ததென அறிக.

(எ-டு) புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்டுறை (புறம் 39)
இயற்சீரான் பன்னிரண்டும் பதினொன்றுமாகிய எழுத்தால் அளவடியாய்த்தன்றளை பெற்றுவந்தன

செங்கண் சின்னீர்ப் பெய்த சீறில் (புறம் 319)
நள்ளி வாழியோ நள்ளி நள்ளென் (புறம்149) இவை இயற்சீரான் எட்டும் ஒன்பதுமாகிய எழுத்தான் சிந்தடியாய்த்தன்றளை பெற்று வந்தன.

இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்
ஈண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇ
(புறம்-161)
நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேல்
(புறம் 200)

இவை பதின்மூன்றும், பதினொன்றும் பதினான்குமாகிய எழுத்தால் அளவடியாய் இயற்சீரும் ஆசிரிய உரிச்சீரும் விரவித்தன்றளையான் வந்தன.

"நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை" (புறம் - ) இது பதினைந்தெழுத்தான் நெடிலடியாய் இன்சீர் விரவி "தணிந்த நிணந்தயங்கு" என வெண்டளை பெற்றுவந்ததாயினும் நெருப்புச்சினம், நிணந்தயங்கு என முன்னும் பின்னும் ஆசிரிய உரிச்சீரான் வந்தமையின் தளை வகை வேண்டாது வந்தது.

இங்ஙனம் பிறவாறு வருவனவற்றையெல்லாம் அசையும் சீரும் இசையொடு சேர்த்தி என்பதனால் ஆசிரிய ஓசைவழாது கூறிக்கொள்க.

சூ. 55 : சீரியை மருங்கின் ஓரசை ஒப்பின்
ஆசிரியத் தளையென் றறியல் வேண்டும்

கருத்து : ஆசிரியத்தளை காணுமாறும் அதன் இலக்கணமுங் கூறுகின்றது.

உரை : நின்றசீரொடு வருஞ்சீர் இயையுமிடத்து நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒரே வகை அசையாக ஒத்து நிற்பின் அதனை ஆசிரியத்தளை என்று அறிக.

நேரும் நேருமாய் ஒப்பினும் நிரையும் நிரையுமாய் ஒப்பினும் அவை ஆசிரியத்தளை என்றவாறு.

இனி நேர்பும், நிரைபும் தளைகோடற்கண் பாதிரி கணவிரி என அடங்கி அவ்வாறே தளைகொள்ளும் என்றறிக. ஓரசை ஒவ்வாது மாறிவரின் வெண்டளையாமென (சூத்திரம் 58) மேற்கூறுப.

(எ-டு) அதுகொல் தோழி காம நோயே (குறுந். 5) நேரசை ஒன்றிய ஆ. தளை

"நாறிதழ்க் குவளையொ டிடையிடுபு விரைஇ" - (குறுந் 62) நிரையசை ஒன்றிய ஆசிரியத்தளை

"இடையிடுபு" என்னும் நிரைநேர்பு இயற்சீர் கணவிரியாய்த்தளை கொண்டது.

வண்டுபடத் ததைந்த (குறு - 21) என்னும் 'நேர்பு நிரை' ஆசிரிய உரிச்சீர் பாதிரியாய்த் தளை கொண்டது.

எஃகு விளங்கு தடங்கை (குறுந் 198) நேர்புநிரை யாகிய ஆசிரிய உரிச்சீர் பாதிரியாய் நின்று ஆசிரியத்

தளை கொண்டது. பிறவும் இவ்வாறே காண்க. மாறிவரின் வெண்டளையாமாறுங் கண்டு கொள்க. இடைக்காலத்து யாப்பியல் நூலார் வகுத்த தளை இலக்கணத்திற்கும் தொல்காப்பியம் கூறும் தளையிலக்கணததிற்கும் வேறுபாடு அறிந்து தொல்காப்பியநெறிபற்றித் தளை அமைப்பினை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

சூ. 56 : குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை இலவே வஞ்சிக் கென்ப

கருத்து : ஆசிரியத்துள் வஞ்சியுரிச்சீர் வாரா அடிகள் இவை என்கின்றது.

உரை : பதினேழ் நிலத்திற்கும் உரிய ஆசிரியப்பாவினுள் நாலெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தளவும் பெறுமென்ற குறளடி சிந்தடி அளவடிகளின்கண் வஞ்சியுரிச்சீர் வந்து உறழுதல் இல என்று கூறுவர் புலவர். எனவே நெடிலடி கழிநெடிலடிகளின் கண் வஞ்சியுரிச்சீர் உறழும் என்பதாயிற்று.

'உறழ்நிலைஇலவே' என்றதனான் வஞ்சியுரிச்சீருள் மூன்றெழுத்துச் சீரும் சிறுபான்மை நான்கெழுத்துச்சீரும் அருகி வரினும் இழுக்காதெனக் கொள்க.

(எ-டு) விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (குறு-210)
பதின்மூன்றெழுத்து அளவடியுள் "காக்கையது" என மூன்றெழுத்து வஞ்சியுரிச்சீர் வந்தது.

மத்துக்கயி றாடா வைகற்பொழுது நினையூஉ (பதிற் - 8)

"வைகற்பொழுது" என நான்கெழுத்து வஞ்சியுரிச்சீர் வந்தது.

"நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு" (சிறுபா - 125)

பன்னிரண்டெழுத்து அளவடியுள் "கொள்கையொடு" என மூன்றெழுத்து வஞ்சியுரிச்சீர் வந்தது.

பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய (புறம் - 161)

இப்பதினான்கெழுத்து அளவடியுள் "தடக்கையொடு" என நான்கெழுத்து வஞ்சியுரிச்சீர் வந்தது.

இவை ஆசிரிய ஓசை வழாமல் நின்றவாறும் உணர்க. இவற்றுள் வரும் ஐகாரங்களைப் போலியெழுத்தாக மாற்றின் வழுநேராமையும் உணர்க.

சூ. 57 : அளவும் சிந்தும் வெள்ளைக்குரிய

கருத்து : பதினேழ் நிலத்துள் வெண்பாவிற்குரிய நிலம் இத்துணை எனக் கூறுகின்றது.

உரை : எழுத்தளவையான்வரும் பதினேழு நிலத்துள் ஏழு எழுத்து முதல் ஒன்பதெழுத்தளவும் வரும் சிந்தடிகளும் பத்தெழுத்து முதல் பதினான்கெழுத்தளவும் வரும் அளவடிகளும் ஆகிய எட்டு நிலங்கள வெணபாவிற் குரியவாகும்.

(எ-டு) "மன்று மருந்து நினைந்து பொருந்து"
பிறப்பு விலக்கிடும் பின் (மன்றுமருந்து = அம்பலக்கூத்தன்)

ஏழெழுத்தடி
"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்"
நற்றாள் தொழாஅர் எனின். இது பதினான் கெழுத்தடி. இனி, "அளவும் சிந்தும்" எனத் தலை தடுமாற்றமாகக் கூறியதனான்.
"அறினியலான் இல்வாழ்வா னென்பான்
பிறனியலான் (குறள் - 147)
"படியுடையார்ப் பற்றமைந்தக்கண்ணும்
மடியுடையார்" (குறள் 606)
எனப் பதினைந்தும் பதினாறுமாகிய நெடிலடியான் ஓரோவழி வெள்ளடி வரினும் அமைத்துக்கொள்ளப் பெறுமெனக.

சூ. 58 : தளை வகை ஒன்றாத் தன்மையான

கருத்து : வெண்பா அடிகளுக்குரிய தளையாமாறு கூறுகின்றது.

உரை : மேல் அதிகரித்து நின்ற எண்வகை நிலம் பெறும் வெண்பாவடிகட்குரிய தளை வகையான் சீரியை மருங்கின், நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் அசை ஒன்றாத் தன்மை ஆயினவாம்.

அஃதாவது நேரீற்றியற்சீர்முன் நிரையும், நிரையீற்றியற் சீர் முன் நேரும் வந்து மாறுபடுவதும் வெண்பா உரிச்சீர்முன் நேர்வந்து தளைப்பதுமாம்.

வெண்சீர் முன் நேர்வரின் ஒன்றுதலாகாதோ எனின் ஆகாது, என்னை தளைநிலை கோடற்கண்

வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே (சூ - 29) என்பது விதியாகலின் ஒன்றாத் தன்மைத்தேயாகும். அதனானன்றே ஆசிரியர் ஒன்றா என்னாது "ஒன்றாத் தன்மையான" என்று கூறுவாராயினர்.

இனி இயற்சீரான் வந்தன இயற்சீர் வெண்டளை என்றும், வெண்சீரான் வந்தன வெண்சீர் வெண்டளை என்றும் வழங்குப ஆதலின் தளைவகை என்றார் என அறிக.

(எ-டு) "கற்க கசடறக் கற்பவை கற்றபின்" இவை இயற்சீர் வெண்டளை.
"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு" இவை வெண்சீர்வெண்டளை.

இவை (57, 58) இரண்டனையும் ஒரு சூத்திரமாக உரைத்தார் உரையாசிரியர். இவற்றுள் விதிக்கப்பெற்றவை வேறுவேறு விதிகளானமையான் இரண்டு சூத்திரமாகக் கோடலே சால்புடைத்தென்க.

சூ. 59 : அளவடி மிகுதி உளப்படத் தோன்றி
இருநெடி லடியும் கலியிற் குரிய.

கருத்து : கலிப்பாவிற்குரிய அடி ஆமாறு கூறுகின்றது.

உரை : பதினேழ் நிலத்தவாகிய அடிகளுள் பதினைந் தெழுத்து முதல் இருபது எழுத்தளவும் உள்ள நெடிலடி, கழி நெடிலடி ஆகிய இருவகை அடிகளும், அளவடிக்கண் மிக்க எழுத்தொடு தோன்றி வரும் அடிகளும், உட்பட அவை, கலிப்பாவிற்கு உரியவாகும்.

அளவடியுள் மிக்குத் தோன்றிவரும் அடிகளாவன, பதின்மூன்று எழுத்தடியும் பதினான்கெழுத்தடியுமாம் ஆக எட்டடிகள் கலிப்பாவிற்குரியவாம்.

"அளவடி மிகுதி" எனப் பொதுப்படக் கூறியதனான் வெண்கலிப்பாவுக்கும் ஒருசார் கொச்சகத்துக்கும் பதினோரெழுத்தடியும் பன்னிரண்டெழுத்தடியும் வருதலின், பதினோரெழுத்து முதல் நான்கடிகளும் வருமெனக் கொள்ளினும் இழுக்காது என்க.

(எ-டு)

மரல்சாய மரம்வெம்ப மந்தி யுயங்க (கலி-12) 13 எழுத்தடி.
வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட (கலி - 16) 14 எழுத்தடி
அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால் (கலி - 11) 15 எழுத்தடி
அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும் (கலி - 11) 16 எழுத்தடி
முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையென (கலி - 56) 17 எழுத்தடி
அறநின்ற விதையொழியான் அவலங்கொண டதுநினையாள் (யா. வி) 18 எழுத்து
அவலங்கொண் டதுநினையாள் உருபனிகண் உறைப்பவுமநீ (யா. வி) இது
பத்தொன்பது எழுத்தான் வந்த கழிநெடிலடி
நிலங்கிளையா, நெடிதுயிரா நிறைதளரா நிறை தொடியாள் (யா. வி) 20 எழுத்து

இனி, "ஐயிருதலையின் அரக்கர் கோமான்" எனவும்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர் (கலி-3)
எனவும், பதினோரெழுத்தும் பன்னிரண்டெழுத்தும் வந்தவாறு காண்க.

சூ. 60 : நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்பினும்
வரைநிலை யின்றே அவ்வடிக் கென்ப

கருத்து : கலித்தளை வருமாறும் அதனைக் கொள்ளுமாறும் கூறுகின்றது.

உரை : நிலைமொழியாக வெண்சீர் நிற்ப நிரை முதலாகிய வெண்சீர் வந்து தளைத்து கலித்தளையாவதே யன்றி நிரைமுதலாகிய இயற்சீரும் நிரைமுதலாகிய ஆசிரிய உரிச்சீரும் நிரைமுதலாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து தட்பினும் கலித்தளையாதலினின்றும் நீக்குதலில்லை மேற்கூறிய கலியடிக்கு என்று கூறுவர் புலவர்.

இதனான் வெண்சீர் வந்து நிரைமுதலாகத் தளைத்தலே சிறப்புடைய கலித்தளை என்பதும் பிற சீர்கள் நிரைமுதலாக வந்து தளைப்பது சிறப்பில்லாத கலித்தளை என்பதும் புலப்படும்.

"வெண்சீர் ஈற்றசை நிரையசையியற்றே" என்பதனான் வந்து நிரை தட்பினும் என்றார்.

'தட்பினும்' என்னும் உம்மை நிரைமுதலாகிய வெண்சீரே யன்றி நிரைமுதலாகிய பிறசீர் வரினும் என நின்றமையின் எச்சஉம்மை.

"கலித்தளை மருங்கின் கடியவும் பெறாஅ"(சூ. 24)எனவும்
கலித்தளை அடிவயின் நேரீற்றியற்சீர்
நிலைகுறித்தன்றே தெரியுமோர்க்கே (சூ. 25) எனவும் வந்த சூத்திரங்களான் கலியடிக்கண் வெண்பாஉரிச்சீரும் ஆசிரியஉரிச்சீரும் ஒருங்கு வருமென்பதும் வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீரொடு தளைத்தல் தளையாகும் என்பதும் பெறப்பட்டமையான் ஈண்டு நிரைமுதல் வெண்சீர் வந்து தளைப்பினும் வரைநிலை இன்றே எனக் கூறினார்.

எ. டு : "தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும்
உரைத்தனரே (கலி. 11) தாழிசைகள் யாவும்
நிரைமுதல் வெண்சீரொடு தளைத்துக் கலித்தளையாயின
அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்"

இதனுள் முதற்சீர் நிரைமுதல் வெண்சீரொடும் இரண்டாம் சீர் நிரைமுதல் இயற்சீரொடும் தட்டுக் கலித்தளையாயின.

"முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று"
இதனுள் மூன்றாம் சீர் உரியசை மயங்கிய இயற்சீரொடு தளைத்துக் கலித்தளையாயிற்று.

"வரைவின்றிச் செறும் பொழுது" (கலி-8) வெண்சீர் உரியசை மயங்கிய இயற்சீரொடு நிரைமுதலாகத் தளைத்துக் கலித்தளையாயிற்று. பிறவும் சான்றோர் இலக்கியங்களுட் கண்டு கொள்க.

சூ. 61 : விராஅய் தளையும் ஒருஉ நிலை இலவே

கருத்து : கலிவகை அடிக்கண் தளைவிரவி வருமென்கின்றது.

உரை : கலியடிக்கண் கலித்தளையேயன்றி வெண்டளையும் ஆசிரியத்தளையும் நீக்கும் நிலையிலவாம்.

ஒருசார் கொச்சகக்கலிகளும் வெண்கலியும் கலியுறுப்புள் சிலவும தளை விரவி வருமாறு கலித்தொகையுள்ளும் பிற சலிப்பாவினுள்ளும் கண்டு கொள்க.

சூ. 62 : இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்பவும் உளவே

கருத்து : நால்வகைப் பாக்களுள் ஒன்றன்அடி பிறிதொன்றன் கண் விரவுமாறு கூறத் தொடங்குகின்றார். இச் சூத்திரம் ஆசிரியப்பாவின்கண் வெண்பா அடி விரவு மாறு கூறுகின்றது.

உரை : ஆசிரியப்பாவின்கண் இயற்சீர் தளைத்த வெண்பா அடி நிற்றற்குரிய முறைமையான் வந்து நிற்பனவும் உள வாகும்.

நிற்றற்குரியமரபாவது ஏனைய அடிகளின் அகவலோசை சிதையாமல் அவற்றொடு கலந்து நிற்றலாம்.

'உள' என்றதனான் ஒன்றற்கு மேலும் வருமெனக் கொள்க. உம்மையை இயற்சீர் வெள்ளடி என்பதனோடு கூட்டி எச்சமாக்கி வெண்சீர் விரவிய வெள்ளடியும் அருகி வருமெனக் கொள்க.

(எ-டு) எறும்பி அளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல்லன்ன பாறை ஏறி (குறுந் - 12)

இதனுள் முதலடி இயற்சீர் வெண்டளையான் வந்தது காண்க.

அழல்பொழி யானையின் ஐயெனத்தோன்றும்
நிழலில் ஓமை நீரில் நிளிடை (அகம் 223)

இதனுள் முதலடி வெண்சீர் விரவிய வெண்டளையான் வந்தது காண்க.

சூ. 63 : வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீரடியும் உளவென மொழிப

கருத்து : ஆசிரியத்துள் ஐஞ்சீரடியும் வருமென்கின்றது.

உரை : ஆசிரியப்பாவினுள் நிலைக்குரி மரபினான் வெண்டளை விரவியும் ஆசிரியத்தளை விரவியும் ஐஞ்சீரடிகள் வருவன உள என்று கூறுவர் புலவர்.

ஐஞ்சீரடியாகலின் ஆசிரியம் விரவியும் என்றார் "வெண்பா நடைத்தே கலி" (சூ. 108) என்பதனான் கலித்தளை விரவி வருமென்பதும் கொள்க.

ஐஞ்சீரடியும் என்ற உம்மையால் ஒரோவழி அறுசீரடியும் ஆசிரியத்துள் வருமென்றவாறாம்

(எ-டு) சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
அம்பொடு வேனிற்கும் வழியெல்லாம் தானிற்கு மன்னே
இவற்றுள் மூவகைத் தளையும் விரவி வந்தமை காண்க.

நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே (சூ. ) என்றமையான் நாற்சீரின் மிக்க அடிகள் வாராவோ என நிகழும் ஐயம் நீங்க எழுசீரடி வரை பாக்களுள் வருமென உணர்த்துவாராய் இச்சூத்திரத்தான் ஐஞ்சீரடியும் அதுவருமிடனும கூறினார். அறுசீரும் எழுசீரும் மேற்கூறுப.

சூ. 64 : அறுசீரடியே ஆசிரியத் தளையொடும்
நெறிபெற்று வருஉம் நேரடி முன்னே

கருத்து : அறுசீரடி வருமிடங் கூறுகின்றது.

உரை: ஆறுசீர் கொண்ட அடி கலிப்பாவின்கண் ஆசிரியத் தளையொடு நெறி பெற்றுவரும் எனக் கூறுவர் புலவர். "என்ப" என்றது அதிகாரத்தான் வந்தது.

நெறி பெறுதலாவது ஆசிரயத்தளையொடு வரினும் துள்ளலோசைககியைய வருதலாம்.

ஆசிரியத்தளையொடும் என்னும் உம்மையான் வெண்டளை விரவி வருதலுங் கொள்க.

ஒரு சாராசிரியப்பாவும் வெண்பாவும் முறையே இருசீரடியும் முச்சீரடியும் இடையும் இறுதியுமாக வரும். கலிப்பா யாண்டும் நாற்சீரடியானே வருமென்பது இலக்கணமாதலின் நேரடி என்றது கலியடியைக் குறித்து நின்றது. அதனான் நேரடி என்பது கலிப்பாவிற்கு ஒரு பெயராகும் என்பதும் உய்த்துணரப்படும். இதற் இதுவே பொருளென்பது வரும் சூத்திரத்தானும் உணரலாம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## உலகம் பொய் (மித்தை) என்பதை விளக்கும் உவமங்களும் அவற்றின் நயமும்.

டாக்டர் மோ. அ. துரைஅரங்கசாமி,
எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.
40. நைனியப்பன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை -2.,

**மறைமுடிபு :**

"உலகமும் அதன் முதற் காரணமான அவித்தையும் பொய்; நிறை அறிவுப் பிழம்பாகிய பெரிய பொருளே மெய் (சத்தியமாம்). அந்த அறிவுப் பிழம்பாகிய பெரிய பொருளே நீ", என்று கூறுதலால், "எல்லாம் மித்தை; எல்லாம் பெரிய பொருள்; எல்லாம் நான்" என்னும் மறைமுடிபு பெறப் பட்டவாறு உணரலாம்.

எல்லாம் பொய்யாய் (மித்தையாய்) விளங்கினலன்றி, எல்லாம் பெரிய பொருளாய் விளங்குதலும், எல்லாம் பெரிய பொருளாய் விளங்கினலன்றி எல்லாம் நானாக விளங்குதலும் இல்லையாம்.

மறைநூல்கள், உலகம் பொய் (மித்தை) என்பதற்குப் பல உவமங்கள் கூறுகின்றன. அவ்வாறு கூறுதல் வீட்டில் விருப்பம் கொண்டு அதையடைய வழி உசாவி நிற்கும் தக்கோன் மனத்தில் உலகம் பொய் (மித்தை) என்பது நன்றாய்ப் பதிதற்பொருட்டாம்.

**ஆசிரியர் — மாணவன் உரையாடல் :**

"உலகம் ஒன்றே உளது, அஃது அழிவதில்லை", என்னும் மாணவனை நோக்கி, உலகம் செயப்படுபொருளேயன்றி முதற் பொருளன்று, முதற்பொருள் ஆவது எங்கும் நீக்கமற நிறைவாய் நிற்கும் பெரிய பொருளே என்றும், தாயினிடத்திலிருந்து பிள்ளை எப்படிப் பிறந்ததோ அப்படியே பெரிய பொருளிலிருந்து உலகம் தோன்றியது என்றும் ஆசிரியர் கூற மேலே ஆசிரியருக்கும் மாணவனுக்கும் நடக்கும் உரையாடல் வருமாறு :

மாணவன் ;- தாயினிடத்திலிருந்து பிள்ளை பிறந்ததுபோல் பெரிய பொருளிலிருந்து உலகம் தோன்றுமாயின், தாய் வேறு

பொருள், பிள்ளை வேறு பொருள்; அன்றி இரண்டும் துண்டு துண்டாகிய பொருள்கள் — இந்த உவமத்தின்படி பார்ப்போமானால் பெரிய பொருளும் உலகமும் துண்டுதுண்டாகிய பொருள்கள் ஆகின்றன. இது பெரிய பொருள் நீக்கமற நிறைவாய் நிற்பது என்று உரைத்தற்கு முரணாகின்றதே !

ஆசிரியர் :- உலகமே பொருள் என்றும், அதற்கு அடிப்படையாகப் பிறிதொரு பொருள் இல்லை என்றும் கூறும் முடிபை மறுக்கவேண்டி அதற்கு மேல் பொருளொன்று உண்டெனத் தாய் பிள்ளை உவமம் கூறினதேயன்றி, அதுவே முடிந்த முடிபன்று. பின், பால் தயிராவது போல் திரிபாம் (பரிணாமமாம்). தாயும் பிள்ளையும் வேறானமையின் உண்டாகும் நிறைவு குறைவான குற்றம், பால் தயிராவதான திரிபு நிலையில் இல்லை. இவ்வுவமத்திற்குப் பொருள் (உபமேயம்) பெரிய பொருளே உலகமாம் என்பதாம்.

மாணவன் :- ஆசிரியரே, நீர் உரைத்த குற்றம் இல்லாவிடினும், வேறு பெருங்குற்றம் உண்டாகின்றது. அஃது யாதோவெனின், பாலே தயிராவதில் கெட்டுத் தயிராகின்றது என்பதாகும். இந்த உவமத்தின்படி, பெரிய பொருள் கெட்டு உலகாகின்றது எனல் வேண்டும். அம்மட்டோ ! பால் கெட்டுத் தயிரானால் அத் தயிர், தயிராகவே இராது; அதுவும் கெட்டு மோரும், அதுவும் கெட்டுப் பிறிதொன்றும் ஆகி, முடிவில் இன்ன நிலைமைத்து என்று உரைக்க இயலாமற்போம். அங்ஙனமே, பெரிய பொருள் கெட்டு உலகாகி, அதுவும் கெட்டு வேறாகி, அதுவும் கெட்டு மற்றொன்றாகி இறுதியில் இன்ன நிலைமைத்து என்று கூறமுடியாமற்போம்.

ஆசிரியர் : அஃது உண்மைதான். நாம் நீக்கமற நிறைவாய் நிற்பதென்பதற்குக் குற்றம் வாராமல் இருத்தற் பொருட்டும், துண்டுதுண்டாகிய இரண்டு பொருள்களல்ல என்பதற்கும் பால் தயிரென்னும் உவமம் கூறினதேயன்றி, அதுவே முடிந்த முடிபன்று. பின்னை, மண்குடம் என்பது போல் முதலும் செயப்படு பொருளும் (காரணகாரியம்) ஆம். மண் கெடாமல் குடமாவதுபோல பெரிய பொருள் கெடாமல் உலகம் ஆகின்றது.

மாணவன் : இதிலும் குற்றம் இல்லாமற் போகவில்லை; மண், வேறுபட்ட வடிவம் கொண்டன்றோ குடமாகின்றது;

அங்ஙனமே பெரிய பொருள் வேறுவடிவம் கொண்டன்றோ உலகாக வேண்டும்? வேறுபடுதலின்றிய பெரிய பொருளுக்கு வேறுபாடு கற்பிப்பது நேர்மையன்றே!

ஆசிரியர் : உண்மைதான். பால் கெட்டுத் தயிராவது போல் மண்கெட்டுக் குடமாவதில்லை என்பதற்கும், தயிர் மீண்டும் பாலாகாமற் போவது போலன்றிக் குடம் மீண்டும் மண் ஆகும் என்பதற்கும் இவ்வமமேயன்றி மற்றப்படியன்று. இனி வேறுபாடு அடையாத ஒன்றை உவமமாகக் கூறுகின்றோம். அஃதாவது ஞாயிறும் அதன் எதிர்ப்பிழம்பு பாகிய(நிழல் அல்லது பிரதிபிம்பமான) ஞாயிறும் போலவாம். ஞாயிறு வேறுபாடு அடையாமல் எப்படி எதிர்ப்பிழப்பு (பிரதிபிம்பம்) ஆகின்றதோ அப்படியே பெரிய பொருளும் வேறுபாடு அடையாமல் எதிர்ப்பிழம்பாகின்றது.

மாணவன் : இதிலும் தடையில்லாமற் போகவில்லை. முதற்பிழம்பாகிய பொருள் எதிர்ப்பிழம்பாவதற்கு அடிமனை (ஆதாரம்) ஒன்று வேண்டும். ஞாயிறு, தன் எதிர்ப்பிழம்பு பெறுவதற்குத் தண்ணீர் எப்படி அடிமனையோ, அப்படியே பெரிய பொருள் தன் எதிர்ப்பிழம்பு பெறுவதற்கு அடிமனை ஒன்று வேண்டும். எது மற்றோர் அடிமனையில் எதிர்ப் பிழம்பு பெறுவதாகின்றதோ, அது நிறைவு குறைவான பொருளாயிருக்க வேண்டுமேயன்றி ஒருபோதும் நீக்கமற நிறைவான பொருளாயிருத்தல் இயலாது. தண்ணீரில் எதிர்ப் பிழம்பாகும் ஞாயிறும் கண்ணாடியில் எதிர்ப்பிழம்பாகும் நம் முகமும் நீக்கமற நிறைவான பொருளாகுமா? ஞாயிறும் நமது முகமும் ஓர் இடத்திலும், தண்ணீரும் கண்ணாடியும் பிறிதோர் இடத்திலும் இருக்கின்றமையின் முதற்பிழப்பு எதிர்ப்பிழப்பு உவமம் நிறைவு குறைவான பொருளுக்கே பொருந்தும் என்றவாறாயிற்று. இவ்வுவமத்தின்படி பெரிய பொருள் நிறைவு குறைவான பொருளாகின்றது.

ஆசிரியர் :- முதற் பிழப்பு எதிர்ப்பிழப்பு என்ற உவமம் பெரிய பொருள் வேறுபடுவதில்லை என்பதற்கு மட்டுமே. இனி நீக்கமற நிறைவாதற்குக் குற்றம் வராமைப் பொருட்டு வேறு உவமம் கூறுகின்றோம். அது கயிற்றிற் பாம்பும் கிளிஞ்சிலில் வெள்ளியும் எப்படித் தோன்றுகின்றனவோ அப்படியே பெரிய பொருளினிடத்து அறிவின்றிய வடிவமான உலகம் தோன்றுகின்றது.

மாணவன் :- இதிலும் வினா இல்லாமலில்லை. கயிற்றைத் தவிரப் பாம்பில்லை என்று தெளிந்த பின்பு, பாம்பு தோன்றுவதில்லை. உலகம், முதிற்பொளையன்றி இல்லை என்றுணரினும் மீண்டும் தோன்றுகிறது. மண்ணையன்றி குடமென்னும் பொருள் இன்றென ஆய்ந்தறியினும் பெயர்த்தும் தோன்றுவதைப் பார்க்கின்றோமன்றோ !

ஆசிரியர் :- உலகம் பொருளன்று என்பதற்கு மட்டும் கயிற்றிற் பாம்பும் கிளிஞ்சிலின்கண் வெள்ளியும் எடுத்துக் காட்டேயன்றி முற்றுமன்று. இனி அக்குற்றமும் வராமல் நீக்குகின்றோம். அஃதியாதெனின், கானல் நீராம். கானலையன்றி நீர் முக்காலத்தும் இன்றெனத் துணியினும் மீண்டும் தோற்றிக் கொண்டேதானிருக்கும்.

மாணவன் :- கானலினிடத்து நீர் இல்லை என்று தெளிந்த பின்னர்த் தோன்றினும் அஃது அநுபவத்திற்கு (நுகர்வதற்கு) வருவதில்லை. அஃதாவது நீரை அருந்த உதவுவதில்லை. உலகமோ அவ்வாறன்று ; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றங்கள் நுகரப்படுகின்றன. ஆதலின், இவ்வெடுத்துக் காட்டும் பொருத்தமாகாது.

ஆசிரியர் : உலகம் பொய் (மித்தை) என்று உணரினும் பெயர்த்தும் தோற்றும் என்னும் அளவும் கானல் எடுத்துக் காட்டாம். மற்றப்படி ஐம்புலனுக்கும் நுகர்வதற்கு இடமாகின்ற வேறு எடுத்துக் காட்டுக் கூறுவோம். அஃதாவது குளிர் காய்ச்சல் குற்றத்திற் காணும் உலகும் கனா உலகும் பிறவும் போலுமாம். குளிர் காய்ச்சல் குற்றம் முதலியவற்றால் காணும் உலகுதோற்றமேனும் துய்த்தலோடு (அநுபவத்தோடு) கூடிய தோற்றமாம்.

இதற்கு மேல் மாணவன் ஒன்றும் கேட்பதற்கில்லையாதலால் மாணவன் ஆசிரியர் உரையாடல் இதனொடு முடிவு பெற்றதாகும்.

உலகம் பொய் என்பதற்குக் கைவல்ய நவநீதத்தில் கானல் நீர், கிளிஞ்சில் வெள்ளி, கந்தர்ப்ப நகரம், கனாவுலகம், வானத்தின் நீலம், கயிற்றிற் பாம்பு, மலடிமகன், முயற்கோடு, கட்டையிற் கள்வன், என்பன எடுத்துக் காட்டுக்களாகத்தரப் பட்டுள்ளன.

கைவல்ய நவநீதம் கூறும் எடுத்துக் காட்டுக்களுள் மலடிமகனும், முயற்கோடும் சொல் அளவாயுள்ள பொய்ப் பொருளாம் (அத்பதார்த்தமாம்); ஏனையவை சொல்லும் தோற்றமமுமாயுள்ள பொய்ப் பொருளாம் (மித்தியா பதார்த்தமாம்). கந்தர்ப்பநகரம் ஆவது முகில் திரளில் (மேக படலத்தில்) தோன்றும் நகர வடிவம், அல்லது இந்திரஜலக்காரனால் ஆக்கப்பட்ட நகரம், அல்லது மரண காலத்தில் தோன்றும் நகரமாம்.

"இந்தப் பெரிய பொருளில் பல என்பது சிறிதுமில்லை" என்றற்றொடக்கத்து மறைமொழிகளால் உலகவடிவ செயப் படுபொருளோடு கூடிய மாயை, மலடிமகன், வான்மலர், முயற்கோடு முதலியனபோல முக்காலத்தும் இன்றெனப் பெறப் படுமாலால் அது துச்சையாம் (அசத்தாம்)

கானல்நீர், கிளிஞ்சில் வெள்ளி, கந்தர்ப்பநகர், கனாவூர், வானமை, கயிற்றிற் பாம்பு, கட்டையிற் கள்வன் முதலியன உவமங்களும், உலகவடிவச்செயப் படுபொருளோடு கூடிய மாயை மித்தை, காணப்படுவதாயிருத்தலின், யாது காணப் படுவது அது மித்தை. கயிற்றரவுபோல, யாது மித்தையன்று, அது காணப்படுவதன்று, உயிர்போல" என்னும் கருதல் அளவையும் பிறவும் ஆகிய அளவையோடு கூடிய யுத்தியினால் அம்மாயை அநிர்வசநீயையாம் (சத் என்னும் உண்மைக்கும் அசத் என்னும் இன்மைக்கும் வேறாயிருத்தலால் பொய் என்று உறுதி செய்வதற்கு உரிய பிழம்பு உடையதாகும் - பாத யோக்கிய சொரூபம் உடையதாகும்).

உயிர் உடல் பற்றிய ஆராய்ச்சியின்றிய அறிவிலிகளது சித்தத்தில் அம்மாயை (உயிர்போல) என்றுமுள்ள பொருளாகத் தோன்றுதலின் உண்மைப் பொருளாம் (வாஸ்தவியாம்). இந்த மூன்று வேறுபாடுகளும் அறியத்தக்கனவாகும்.

மண்ணொன்றே பெயர் உருவங்களால் குடம் முதலியன வாக வேறு வேறானாற் போலவும், பொன் ஒன்றே பல்வேறு நகைகளானாற் போலவும், நீர் ஒன்றே காற்றின் வயத்தால் நுரை குமிழி அலை முதலிய தொகுதி ஆனாற்போலவும், காற்றொன்றே மூங்கில்துளை வேறுபாட்டால், உயரோசை இடையோசை, தாழோசை ஆனாற்போலவும், இசை

யொன்றே பாடுவான் குறிப்பால் பலபண் ஆனாற்போலவும் விண் ஒன்றே வீடு முதலிய இடையீட்டால் (உபாதியால்) பலவானாற்போலவும், வாழை இலையை துண்டித்தலால் யானை, குதிரை முதலியபலவாக ஆனாற்போலவும், ஓசை யொன்றே இசைக்கருவிகள் வேறுபாட்டால் பலவானாற் போலவும், ஞாயிறொன்றே குடநீர் குட்டைநீர் வயத்தால் பலவானாற் போலவும், எண்ணொன்றே சுழிசேர்க்கை வேறு பாட்டால் பத்து, நூறு, ஆயிரம், முதலியன ஆனாற்போலவும் அறிவொன்றே உபாதி வேறுபாட்டுக் கற்பனையால் முற்கூறிய உயிரிறை முதலான வேறுபாட்டு விகாரகற்பனையாய் விளங்குகின்றமையின் அஃதே உண்மைப் பொருளாமென்று உணர்தல் வேண்டும்.

## இரண்டு ஐயங்களும் அவற்றின் தெளிவும்

"தானாகும் பிரமரூபம் சற்குரு நூலாற்றோன்றும்", (81) என்ற கைவல்ய நவநீதத் தத்துவ விளக்கப்படலப் பாடலால், தானாகும் பெரிய பொருள், நூல் அளவையால் (ஆகமப்பிரமாணத்தால்) அறியப்படும் என்று கூறப்பட்டது. ஆனால், அதே பாடலில், "ஆனாலும் தடைகள் உண்டேல் அநுபவம் உறைத்திடாதே", என்றிருப்பது, அது நூல் அளவைக்கு (ஆகமப்பிரமாணம் அல்லது வாக்குக்கு) எட்டாதது என்பதை உணர்த்துவதாகும். எனவே, பெரிய பொருள் நூல் அளவைக்கு எட்டுவதா அன்றா? என்ற ஐயம் ஏற்படுகின்றது.

"பூச்சிய ஈசன் சீவன்" எனத்தொடங்கும் கைவல்ய நவநீதத் தத்துவ விளக்கப் பாடலில், "உன்னை நீ அறிந்து நீ பிறிந்துகொள்ளே" (59) என்பதால் அப்பெரிய பொருள் மனத்திற்கு எட்டுவதாம் என்பது உணர்த்தப்பட்டது.

"எல்லாங்கண்டறியு மென்னை ஏது கொண்டறிவே னென்று சொல்லாதே, சுயமாஞ் சோதிச் சுடருக்குச் சுடர்வே றுண்டோ", (66) எனவும், "அறிவுக்கும் அறிவு செய்யும் அறிவுவே றுண்டென் றெண்ணும் அறிவற்ற குதர்க்க மூடர்க்கு அநவத்தை டலமாய்த் தீரும், அறிபடும் பொருள் நீ அல்லை, அறிபடாப் பொருள் நீ அல்லை, அறிபொருள் ஆகும் உன்னை அநுபவித் தறிவாய் நீயே", (67) எனவும் வரும் கைவல்ய நவநீதத் தத்துவ விளக்கப் படலப் பாடல்களால் அப்பெரிய பொருள் மனத்திற்கு எட்டாதது என்பது

உணர்த்தப்பட்டது. எனவே, பெரிய பொருள் (பிரஹ்மம்) மனத்திற்கு எட்டுவதா, அன்றா ? என்ற ஐயம் ஏற்படுகின்றது.

இந்த இரண்டு ஐயங்களையும் போக்கும் வழியை ஈண்டு நோக்குவோமாக.

அறிவே வடிவாயுள்ள அந்தப் பெரிய பொருள் செவி முதலிய பொறிகளுடனே தொடர்புடையனவான ஒலி முதலிய புலன்களுள் ஒன்றன்று ஆதலாலும், கருதலளவையால் அறியப்படும் பொருள்களுள் ஒன்றன்று ஆதலாலும், உவம அளவையால் அறியப்படும் பொருள்களுள் ஒன்றன்று ஆதலாலும், நூல் அளவையாலேயன்றி ஏனைய காண்டல் கருதல் உவமம் என்னும் மூன்று அளவைகளாலும் அறியப்படுவ தன்றாம், ஆகையால், அந்த அளவைகளால் பெரிய பொருளை உறுதி செய்தல் இயலாது? (உறுதிசெய்தல் இயலுமெனின், அதற்குப் பொறிகட்குப் புலனாதல், அடிப்படை (ஏது) உண்மை, ஒப்புமையுடைமை, இனம் பண்பு தொழில் தொடர்பு கள் இன்மையின் அது பிழையாம்.) (பெரிய பொருள் நூல் அளவையால் அறியப்படுகின்ற தென்பதிற் பிழை யாதுளது எனின், இனம் பண்பு தொழில் தொடர்புகள் ஆகிய பண்புச் சிறப்பு (குணவிசேஷம்) உடையதே வாக்கிற்குப் புலனாம் என்பது ஒழுங்குமுறையாய் (நியமமாய்) இருத்தலின், அது பண்புச் சிறப்பு உடையதாயின் நூலளவைக்குப் புலனாம் உண்மையில், பண்புச் சிறப்பொடு தொடர்புபடாதிருத்தலின், சிறப்படை ஏதுமின்றி அறிவே வடிவமாயுள்ள பெரிய பொருள் நூலளவைக்குப் புலனாகாதென்பது முடிந்தமுடிபாம்.

சிறப்படைகள் இன்றி அறிவே வடிவமாய் இலங்கும் பெரிய பொருள் (மறைவாக்கியம், உலக வாக்கியம் என்னும் இருவகை வாக்கியத்துள் யாதொரு) வாக்கியத்திற்கும் புலனாகாது என்று கூறிய மறையானது, தத்துவமசி (அதுநீ) முதலிய பெருமொழிகளின் தத்துவம் முதலிய சொற்களின் ஆகு பெயர்ப் பொருள் தொடர்பினாலே (இலட்சணாவிருத்தியி னாலே), அந்தப் பெரிய பொருளைத் தெரிவித்துள்ளது. (ஆதலால், பெரிய பொருள், பெருமொழியாகிய மகா வாக்கியத்திற்குப் புலனாம்).

பெரிய பொருள் வாக்கியத்திற்குப் புலனாகாது, வாக்கியத் திற்குப் புலனாகும் என்னும் இருவகை வாக்கியத்துள் அளவை

யாக மேற்கொள்ளத் தக்கது யாது எனின், மறைகள் பொய் கூறா ஆகலின் இருவகை வாக்கியமும் உண்மையேயாம். அதுபற்றி ஓர் எடுத்துக்காட்டு வாயிலாக ஈண்டுக் கூறுவதை நோக்குக :

மணவினை புரிந்து கொண்டு தன் கணவனொடு மருவின் பொருட்டுத் தன்தாய் வீட்டிற்கு வந்த மணமகளை நோக்கி, மணமகனை அறியாத ஒருத்தி "இங்கு உள்ளாருள் உன் கணவன் இவனா ?" என்று ஒவ்வொருவராகச் சுட்டி வினாவ, அதற்கு அவள்) தன் கணவன் அல்லாதவர்களை "இவன் அல்லன் ; இவன் அல்லன்", என்று தன் தலையை மறுதலைக் குறிப்புணர்த்தும் வகையால் ஆட்டித் தன்னை வினாவியவளுக்கு விடை கூறிவந்தாள்; அவ்வாறு வினவி வந்தவள், தன் கணவனைச் சுட்டி வினாவியபோது, அம் மணமகள் நாண மடைந்து பேசா மடந்தையானாள் (இவன் என் கணவன் என்று கூறாமலே கூறினாள்) என்னும் வழக்காறு போலப் பெரிய பொருளுக்கு வேறாயிருப்பனவெல்லாம அறிவற்ற (ஜடப்) பொருள்களாதலின் அவற்றை மறை யானது, 'இது பெரிய பொருளன்று' என்று விலக்கிப் பின்னர் அன்றென்று விலக்குதற்கு இடம் பெறாயல் எஞ்சி நின்ற பெரிய பொருள் என்று கூறாமற் கூறிற்று.

இதனால், பெரிய பொருள் நூலளவைக்கு எங்ஙனம் புலனாம் என்ற ஐயம் நீங்கி தெளிவெய்தலாம்.

இனிப் பெரிய பொருள் மனத்திற்குப் புலனாம் மனததிற்குப் புலன் ஆகாததாம் என்று ஐயமும் ஒழியும் வகையைக் காண்போம்.

"(மன்னவர்க்கு அமைச்சர் போல உள்ளம் - அந்தக் கரணம் - கருதியதைப் பொறிகள் இயற்றுதலின்) செவி முதலிய எல்லாப் பொறிகட்கும் மன்னன் உள்ளமாம். அவ்வுள்ளத்தின் மாற்று வடிவங்கள் புத்தியும் மனமும் எனப் புறத்திலும் அகத்திலும் உலாவும்.

முகம் தனக்கு எதிரேயுள்ள கண்ணாடியில் மற்றொரு முகமாய் நிழலிடுதல் போன்று (பிரதிபலித்வ போன்று) அறிவு வடிவமான கூடத்தனுடைய நிழல் மற்றோர் அறிவுப் பிழம்பு (சேதனன்) போலப் புத்திவடிவமான உள்ளத்தில் (அந்தக்கரணத்தில்) தோன்றும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ் வாழ்க

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.

## "தமிழ்ப் பொழில்"

# மணிவிழா வேண்டுகோள்

"தமிழுக்குப் பொருள் கொடுங்கள்
தமிழறிஞர் கழகங்கள்
நிறுவி டுங்கள்
தமிழ்ப்பள்ளி கல்லூரி
தமிழ் ஏடு பலபலவும்
நிலைப்பச் செய்வீர்"

(பாரதிதாசன்)

அன்புநலம் சான்ற பெரியீர் :

செந்தமிழ் பேணும் திருவுடையீர் !

வணக்கம். நமது கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்மொழி இலக்கணம், இலக்கியம், கலை, வரலாறு, பண்பாடு முதலிய பொருள்களைப் பற்றிய கட்டுரைகள் அடங்கிய 'தமிழ்ப் பொழில்' என்னும் தமிழாராய்ச்சித் திங்களிதழைக் கடந்த அறுபது ஆண்டுகளாக வெளியிட்டுத் தமிழ்த் தொண்டாற்றி வருவதைத் தாங்கள் அறிவீர்கள். தமிழ்ப் பொழிலின் முதல் பொழிற்றொண்டராகத் தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் அவர்கள் பொறுப்பேற்றுத் தமிழகத்திலும் பிறநாடுகளிலும் வாழ்ந்த தமிழறிஞர்களைக் கொண்டு கட்டுரைகள் எழுதுவித்து இதனைச் சிறந்ததோர் இதழாக வெளியிட்டு வந்தார்கள். தமிழவேளுக்குப் பின்னரும் அம்மரபைப் பின்பற்றி அறிஞர் பலர் பொழிற்றொண்டர்களாகவும் பதிப்பாசிரியர்களாகவும், கட்டுரையாசிரியர்களாகவும் அமைந்து தொண்டாற்றி வந்தார்கள் — வருகின்றார்கள். பேராசிரியர்களும் இலக்கணப் புலவர்களும், அறிஞர் பெருமக்களும் எழுதிய கட்டுரைகளைத் தாங்கிவரும் சிறப்பால் "தமிழ்ப்பொழில்" இன்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு அருப்பொருட் பெட்டகமாகவும், பட்டமேல் வகுப்பிற்

பயில்வார்க்கு ஆசானாகவும், தமிழ்ச் சான்றோர்களுக்கு அறிவு விருந்தாகவும விளங்கி வருகின்றது. அதன் சீரும் சிறப்பும், நலமும் வளமும் அஃகாமல் மேலும் செழிப்புடன் நிகழ்ந்துவரப் பொருளாதாரம் மிகவும் வேண்டப்படுகின்றது.

தமிழ்ப்பொழில் இதழைக் காலத்தே வெளியிடவும் அழகோடும் பொலிவோடும் வெளியிடவும், முற்றக்கற்ற நற்றமிழ்ச் சான்றோர்களின் கட்டுரைகளைக் கேட்டுப் பெற்று வெளியிடவும் கருதுகின்றோம். அதன் பொருட்டு ஓர் இலக்கம் வெண்பொன்னை வைப்பு நிதியாக வைத்து, அதன் வருவாயிலிருந்து அதனைச் சிறப்பாக வெளியிட்டுவர எண்ணியுள்ளோம். ஆதலின், செந்தமிழ்ச் செல்வர்கள் தம்மால் இயன்ற நன்கொடைகளைக் கொடுத்துத் தமிழ்ப்பொழில் வளர்ச்சியிற் பங்கேற்க வேண்டுகிறோம், மேலும் தாய்மொழியாம் தமிழ் மொழி மீது பற்றும் பாசமும் கொண்டோர் தமிழ்ப் பொழிலின் வாழ்நாள் உறுப்பினராகித் துணை செய்யின் அவ்வகையிற் கிடைக்கும் தொகையும் அப்பணிக்குப் பெரிதும் துணை புரியும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்பாலும், தமிழின் பாலும், நல்ல தமிழ் ஆராய்ச்சி இதழின் பாலும் அன்புள்ளம் கொண்டு ஆர்வமுடன் உதவித் துணைபுரிய விழையும் தமிழன்பர்களும், தமிழ்ச் செல்வர்களும் அருள்கூர்ந்து தமிழ்ப்பொழிலுக்கு நன்கொடை தந்தும், வாழ்நாள் உறுப்பினராகியும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துத் "தமிழ்ப்பொழில்" வளர்ச்சியிற் பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

பேராசிரியர் ச. பாலசுந்தரம்,
பொழிற்றொண்டர்

ச. இராமநாதன்,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

# சாலை-சாலினி பங்குகொள்ளும் ஓராசிரியர் பள்ளிகள் சீரமைப்பு மாநாடு

சென்னையில் உள்ள அறிவியக்கப் பேரவை, 25—5—86ல் குடந்தை மாநகரில் "ஓராசிரியர் பள்ளிகள் சீரமைப்பு மாநாடு" நடத்தத் திட்டமிட்டு வருகிறது. மாநாட்டின் நோக்கத்தை விளக்கிப் பேரவை அமைப்பாளர் முனைவர் சாலை அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கை வருமாறு:

'கல்லாரைக் காணுங்கால்,– கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்!'

எளிமையினால் ஒருதமிழன் கல்வியில்லை என்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்' என்று அறைகூவல் விட்டான் நமது புரட்சிக்கவிஞன். ஆனால் நாட்டிலுள்ள ஏழை எளியோரின் நிலை என்ன? 39 ஆண்டுகள் சுதந்தர ஆட்சி நடந்தபின் நாட்டில் உள்ள எளியவர்களின் நிலை என்ன? அவர்களிலே 100க்குத் 95 பேருக்குக் கல்வி இல்லை; தொடக்கக் கல்வி கூட இல்லை: எளியோர்களுக்குக் கல்வி கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல; அவர்களுக்குக் கல்வி கொடுப்பதாகச் சொல்லி நமது அரசு, தன்னையும்மக்களையும் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறது. இந்த ஏமாற்றுப் படுதாவின் பெயர்தான் நாட்டின் பின்தங்கிய பகுதிகளில், அங்கங்கே காட்சியளிக்கும் ஓராசிரியர் பள்ளிகள்!

தமிழகத்திலே மட்டும் 2500 க்கு மேற்பட்ட ஓராசிரியர் பள்ளிகள் உள்ளன. இந்தப் பள்ளிகளிலே 1 முதல் 5 வகுப்பு வரை இருக்கும்; 50, 60, 70, 80, 100, 130 மாணவர்கள் வரை இருப்பார்கள். என்றாலும், அந்தப் பள்ளிகளில் ஒரே ஒரு ஆசிரியரை மட்டும் நியமித்திருப்பார்கள். அந்த ஒரே ஒரு மனிதர் எந்த மாணவர்களைக் கவனிக்க முடியும்? எந்த வகுப்புப் பாடம் நடத்த முடியும்? இந்த நாட்டின் எதிர்காலக் குடிகளாக இன்றைய மழலைகளுக்கு எந்தக் கல்வியை அவர் கொடுக்க முடியும்? ஆனாலும், இவைகளுக்கும் பள்ளிக்கூடம் என்று பெயர்; இவைகளாலும் கல்வி வளர்வதாக, ஏட்டுச் சுரைக்காய்க் கணக்கு!...

இந்த நிலையை மாற்றி, ஒவ்வோர் ஓராசிரியர் பள்ளியையும் சீரான தொடக்கப் பள்ளியாக மாற்ற வேண்டும்; ஒரு பள்ளியில் எத்தனை வகுப்பு இருக்கிறதோ, அத்தனை ஆசிரியர்களை அதிலே நியமிக்க வேண்டும்.

படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் வெளியே திண்டாடுகிறார்கள்; படிப்பிக்கப் போதிய ஆசிரியர்கள் இல்லாமல், ஓராசிரியர் பள்ளிக்குள்ளே நமது இளைய செல்வங்கள் திண்டாடுகிறார்கள். இந்த இரண்டையும் இணைத்தாலே நிலைமை சீராகிவிடுமே! ஓராசிரியர் பள்ளி ஒவ்வொன்றும், அய்ந்து ஆசிரியர்களைக் கொண்ட சீரான பள்ளி ஆகிவிடுமே!

இந்த ஆக்கப்பணிக்கு அரசை எழுப்பி நடத்தவே, பேரவை சார்பில் ஓராசிரியர் பள்ளிகள் சீரமைப்பு மாநாடு நடத்தப் படுகிறது; 25-5-86 காலை முதல் மாலை வரை, குடந்தை மாநகரிலே இந்த மாநாட்டை அறிவியக்கப் பேரவை நடத்துகிறது.

மாநாட்டிலே சாலை - சாலினி பங்குகொள்ளுகிறார்கள். தமிழகத்திலே உள்ள அனைத்துத் தொடக்கப்பள்ளி ஆசிரியர் அமைப்புகளின் பொறுப்பாளர்கள் பங்குகொள்ளுகிறார்கள். தேர்ந்தகல்வியாளர்களும் சீரிய சமுதாயச் செயற்சிந்தனையாளர் களும் பங்குகொள்ளுகிறார்கள்.

நாட்டு மக்களின் நலனிலும் அவர்களின் கல்வியிலும் அக்கறை கொண்ட பெரியோர்கள் எல்லா உதவிகளையும் செய்து மாநாட்டை நடத்தித் தரவேண்டும் என்று அறிவியக்கப் பேரவை விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறது ; ஆமாம், 1986 மே 25ல் அனைத்துத் தமிழ் நல்லோர்களும் குடந்தைக்கு வந்திடுமாறு, அறிவியக்கப் பேரவை, எல்லோரையும் அன்போடு அழைக்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில், பொதுமக்களுக்கு இனிய வேண்டுகோள் விடுத்துள்ளார் முனைவர் சாலை இளந்திரையன்.

# தமிழ்ப்பொழில் உள்ளுறை அடங்கல்

துணர் 59 குரோதன ஆண்டு. மலர்கள் 1—12


| எண். | கட்டுரையும் ஆசிரியரும் | இதழ். | பக்கம். |
|---|---|---|---|
| 1. | அன்மொழித்தொகை— டாக்டர் ஏ. ஆதித்தன் | 5 | 193 |
| 2 | ஆந்திர நாட்டு அகநானூறு-ஓர் ஒப்பாய்வு டாக்டர் சரளா ராசகோபாலன் | 3<br>11 | 97<br>481 |
| 3. | உரிச்சொல் குறைச்சொல்லாகுமா? கன்னக்குறிச்சி வை. தங்கமணி | 11 | 481 |
| 4. | உரை மரபு — பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை | 5 | 211 |
| 5. | உலகம் பொய் (மித்தை) என்பதை விளக்கும் உவமங்களும் அவற்றின் நயமும் டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி | 12 | 561 |
| 6. | உறக்கமும், துயிலும், கலைச்சொல் தேர்வு டாக்டர் இராம. சுந்தரம் | 7 | 289 |
| 7. | ஏட்டில் தமிழ் படும்பாடு - முனைவர் சாலை இளந்திரையன் | 8 | 355 |
| 8. | ஒப்பிலக்கியம் — எஸ். செல்வகணபதி | 4 | 163 |
| 9. | கரந்தைத் தமிழ்ச்சங்கச் சமண சிற்பம்— டாக்டர் சி. கோ. தெய்வநாயகம் | 9 | 410 |
| 10. | கள்ளப்பெரம்பூரில் ஒரு பாடல் கல்வெட்டு புலவர் செ. இராசு | 1 | 1 |
| 11. | கற்பனை கடந்தால் வீடாம் டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி | 9 | 414 |
| 12. | குயிலின் பாட்டு—க. சோமசுந்தரம் | 6, 7 | 277, 293 |
| 13. | சங்க இலக்கியத்தில் கல்வெட்டுச் சொற்கள் பி. எல். சாமி | 4 | 180 |

| எண். | கட்டுரையும் ஆசிரியரும் | இதழ் | பக்கம் |
|---|---|---|---|
| 14. | சங்க இலக்கியத்தில் கல்வெட்டுச்சொற்கள்<br>கட்டுரையாய்வு<br>பேராசிரியர் அ. தட்சணாமூர்த்தி | 6 | 241 |
| 15. | சாத்தனாரின் உவமைத் திறன்<br>டாக்டர் ஏ. என். பெருமாள் | 6, 7 | 283, 298 |
| 16. | சித்தாந்தப்புலவர் மணி முருகவேள்<br>சிறுவை மோகனசுந்தரம் | 8 | 337 |
| 17. | சிறப்பென்னும் செம்பொருள்<br>வித்துவான் கோ. சாமிநாதன் | 12 | 529 |
| 18. | சுவடி அழிவும், அழிப்பும் இழப்பும்<br>திருமதி திரு. த. அழகப்பராசு | 6 | 271 |
| 19. | சுவடியில் ஒரு காலக்குறிப்பு<br>எஸ். சௌந்தரராசன் | 8 | 359 |
| 20. | சுற்றுலா அன்றும், இன்றும்<br>இரா. செயலக்குமி | 5 | 197 |
| 21. | தஞ்சாவூர் பெயர்க் காரணம்<br>டாக்டர் த. கோ. பரமசிவம் | 7 | 327 |
| 22. | தமிழ் அரசியல் இதழியல் வரலாற்றில்<br>திரு. வீ. க. - டாக்டர் வீ. அரசு | 10 | 433 |
| 23. | தமிழ் இதழியத்தில் மேலைத்தாக்கம்<br>டாக்டர் வீ. அரசு | 1 | 32 |
| 24. | தமிழில் எதிர்மறைகள் —<br>வீ. ரேணுகாதேவி | 4 | 145 |
| 25. | திருக்கோயில் ஆய்வு முறை—<br>டாக்டர் ஏ. என். பெருமாள் | 2 | 56 |
| 26. | திருமுருகாற்றுப்படை—<br>திரு. அடிகளாசிரியர் | 4 | 159 |
| 27. | தொல்காப்பிய உவமவியல்<br>காண்டிகையுரை<br>பேராசிரியர் ச. பாலசுந்தரம் | 4, 5, 6,<br>7, 8 | 167, 234, 248<br>311, 344 |
| 28. | தொல்காப்பியச் செய்யுளியல்<br>காண்டிகையுரை<br>பேராசிரியர் ச. பாலசுந்தரம் | 9, 10, 11<br>12 | 425, 449, 489<br>545 |

| எண். | கட்டுரையும் ஆசிரியரும் | இதழ் | பக்கம் |
|---|---|---|---|
| 29. | தொல்காப்பியமும் பழந்தமிழ் வரலாறும்<br>டாக்டர் மோ. இசரயேல் | 2, 3 | 83, 130 |
| 30. | தொல்காப்பியரும் தேர்ப்படையும் -<br>திரு. அடிகளாசிரியர் | 2 | 52 |
| 31. | தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல்<br>காண்டிகையுரை<br>பேராசிரியர் ச. பாலசுந்தரம் | 1 | 13 |
| 32. | தொல்காப்பியர் காலஇடைநிலைகள் ஏன்<br>கூறவில்லை<br>திருமங்கலம் வை. தங்கமணி | 1 | 6 |
| 33. | பகரமா வகரமா ? -<br>முனைவர் ச. சுபாசுசந்திரபோசு | 9 | 385 |
| 34. | பாவேந்தரின் குடும்பவிளக்கு-விருந்தோம்பல்<br>டாக்டர். இராம சுப்பிரமணியன் | 2 | 75 |
| 35. | புதியகோணத்தில் தமிழியல் ஆராய்ச்சிகள்<br>முனைவர் சாலை இளந்திரையன் | 5 | 206 |
| 36. | பெரியகுளத்துக் கல்வெட்டில் வரலாற்று<br>வார்ப்புகள் -<br>புலவர் து. இராசகோபால் | 1 | 30 |
| 37. | பெருமொழிச் சிந்தனை (மகாவாக்கிய விசாரம்)<br>டாக்டர் மொ. அ. துரைஅரங்கசாமி | 10, 11 | 473, 513 |
| 38. | பொருள்நிலைக்குச் சாரியை உதவுகிறதா?<br>கன்னக்குறிச்சி வை. தங்கமணி | 8 | 368 |
| 39. | மகனின் உதவி<br>அமுத இளவழகன் | 10 | 446 |
| 40. | மலை முதல் மனைவரையிலும் கண்ட<br>பல கடவுளர் -<br>பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை | 9, 10, 11<br>12 | 396, 465,<br>505, 535 |
| 41. | மௌரியரைப்பற்றிய சங்கப்பாடல்கள் -<br>காலம் – ஓர் ஒப்பாய்வு -<br>பூரணச்சந்திர ஜீவா | 8, 9 | 373, 391 |
| 42. | வழக்காட்சியில் ஓர் அருஞ்சொல்-<br>எஸ். சௌந்தரபாண்டியன் | 2 | 49 |
| 43. | வீரசோழிய எழுத்திலக்கணக் கோட்பாடு -<br>பி. பெ. சுயம்பு | 3, 4 | 135, 157 |

# FORM IV

## Statement about Ownership and other particulars about Newspaper

TAMIL POZHIL

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication | Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur 613 002 |
| 2. | Periodicity of its Publication : | Monthly |
| 3. | Printer's name : | Thiru. M. Chandramouli<br>Proprietor<br>Gemeni Printing House |
| | Nationality : | Indian |
| | Address : | 1837/1, West Main Street, Thanjavur. 613 009 |
| 4. | Publisher's Name : | Thiru. S. Ramanathan<br>President,<br>Karanthai Tamil Sangam,<br>Thanjavur-2 |
| | Nationaltiy : | Indian |
| | Address : | President,<br>Karanthai Tamil Sangam,<br>Karuntattamkudi, Thanjavur.<br>613 002 |
| 5. | Editor's Name : | Thiru. C. Balasundaram |
| | Nationality : | Indian |
| | Address : | 367, West Main Street,<br>Thanjavur. 613 009 |
| 6. | Name and address of individuals who own the newspaper and partners | Karanthai Tamil Sangam,<br>(Registered)<br>Karuntattamkudi,<br>Thanjavur. 613 002. |

I, S. Ramanathan, hereby declare that the particulars given above are true the best of my knowledge and belief.

*S. Ramanathan,*
Publisher.

## பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்–2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்–2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்–2

பதிப்பாசிரியர்

பேராசிரியர் ச பாலசுந்தரம்

Regd. No. TN/TB/24.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு

6. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர் சரஸ்வதி
மகால் நூல்நிலைய இதழ்,
அரண்மனை, தஞ்சாவூர்.
613 001

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

**தமிழ்ப் பொழில் கட்டணம்**

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 25 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.